# பாட்டாளி சிந்தனை

Volume 28 No. 5

சோசலிஸ்ட் யூனிட்டி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

February 2018

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


### தமிழ்நாடு அரசாங்கத்தின் பஸ் கட்டண உயர்வு

# நிலைகுலைந்த மக்கள் மீதான பேரிடி

ஜனவரி 19, 2018 அன்று மக்களின் கண்கள் இயல்பாக செருகி, தூக்கம் தழுவிய வேளையில் தமிழ்நாடு அரசாங்கம் திடீரென பேருந்துக் கட்டண உயர்வை அறிவித்தது. அதை அந்நொடிப் பொழுதே நடைமுறைக்கும் கொண்டுவந்தது. நள்ளிரவில் அரங்கேறிய வழிப்பறிக்கு ஒப்பான இந்நடவடிக்கையால் தூக்கம் கலைந்து மக்கள் அதிர்ச்சியில் உறைந்தனர்.

ஒக்கிப்புயலும் அடைமழையும் இடைவிடாது பொழிந்து கன்னியாகுமரி, நெல்லைமாவட்டங்கள் வெள்ளக்காடாக மிதந்தபோதும் தங்களின் வீட்டை விட்டு வெளியே வரமுடியாமல் பொதுமக்கள் தவித்தபோதும் அவர்களது உடைமையையும் உயிரையும் பாதுகாப்பதில், பஞ்சரான பஸ்ஸைப் போலவே செயல்பட்டது மாநில அரசின் நிர்வாகம். இன்னமும்கூட நூற்றுக்கணக்கான காணாமல் போன மீனவர்களைக் கண்டறிய முடியவில்லை. நிவாரணப் பணிகளின்போது ஆமைவேகத்தில் இயங்கிய அரசாங்கம் மக்கள் தலையில் பேருந்துக் கட்டணத்தை ஏற்றும்போது மட்டும் எப்படி அசுர வேகத்தில் இயங்க முடிந்தது.

சென்ற ஆண்டு மத்திய அரசாங்கம் அறிவித்த பணமதிப்பு நீக்கத்தாலும், அதன்பிறகு வந்த ஜிஎஸ்டியாலும் சாதாரண மக்கள் நிலைகுலைந்து போயுள்ள நிலைமையில் இந்த பஸ் கட்டண உயர்வு மற்றுமொரு பயங்கர தாக்குதலாகும். அனைத்துத் தரப்பு மக்களும் அத்தியாவசியமாகப் பயன்படுத்தும் ஒரே சாதனமாக இருக்கக்கூடிய பேருந்து போக்குவரத்தின் இத்தகைய கடும் கட்டண உயர்வால் அன்றாடம் வேலைக்குச் செல்லும் கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், மாணவர்கள், சின்னஞ்சிறிய வியாபாரிகள் பலரின் வாழ்வாதாரத்தின் அடித்தளமே ஆட்டம்காணக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. சாமானிய ஏழை, நடுத்தர மக்களின் சிரமத்தை, கஷ்டங்களைக் குறித்து கிஞ்சித்தும் கவலை கொள்ளாது, உயர்த்தப் பட்ட கட்டணத்தை திரும்பப்பெறவே மாட்டோம் என தமிழக அரசாங்கம் கூறுகிறது. அதுமட்டுமின்றி, பேருந்துக் கட்டணம் டீசல் விலையுடன் இணைக்கப் பட்டு அதற்கேற்ப கட்டணம் தானாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும், அரசாங்கத்தின் அதிகார, ஆணவத்தின் உச்சத்தையே வெளிப்படுத்துகிறது.

தற்போதைய இக்கொடுங்கட்டண உயர்வுக்கு அரசாங்கம் கூறும் காரணங்கள் ஒன்றும் புதிதல்ல. நாளொன்றுக்கு ஒருகோடி ரூபாய் நஷ்டம் அதற்கு கூறும் காரணம், டீசல் விலை உயர்வு, புதிய பஸ் மற்றும் உதிரிப்பாகங்களின் விலை உயர்வு, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ‘அதிக’ சம்பளம் போன்ற வழக்கமானவையேயாகும். இந்த சாத்தானின் வேதத்தையே ஆண்ட அரசாங்கங்களும் ஆளுகின்ற அரசாங்கமும் 40 ஆண்டுகளாக மாறி, மாறி கூறிவருகின்றன.

### மக்கள் வரிப்பணத்திலும் தொழிலாளர் உழைப்பிலும் உருவான அரசுப் போக்குவரத்துக் கழகம்

1970களில் தமிழ்நாடு அரசாங்கம் தனியார் போக்குவரத்தை முற்றிலும் அரசு மயமாக்கப்பட்ட காலத்தில் அரசின் முதலீடு போக்குவரத்துக் கழகங்களில் ரூபாய் 30கோடியாகும். இது மக்களின் வரிப்பணத்தில் இருந்து செய்யப்பட்ட முதலீடு ஆகும். இன்றோ, நாளொன்றுக்கு பயணக்கட்டணம் மூலம் அரசுப் போக்குவரத்துத்துறை ரூபாய் 20.74 கோடி வருவாய் ஈட்டுகிறது. இருந்தும் கடன் தொகை 4000 கோடி என்றும் இழப்பு 7000 கோடி என்றும் அரசாங்கம் கூறுகிறது. அரசுப் போக்கு வரத்துக்கழகம் 22533 பேருந்துகளை இயக்குகின்றது. எட்டு கோட்டங்களாகவும் 26 மண்டலங்களாகவும் பிரிக்கப்பட்டு பல நூறு பஸ் டிப்போக்கள் அலுவல கங்கள், கட்டிடங்கள், எந்திரங்கள், தட்டுமுட்டு சாமான்கள், தளவாடங்கள் என்று அதன் சொத்து பல மடங்காக பல்லாயிரம் கோடிகளாக உயர்ந் துள்ளது. இந்த சொத்து உருவாக்கத்தின் மூலவர் களாக தொழிலாளர்கள்தான் இருக்கின்றனர். இந்த சொத்துக்களின் மதிப்பு, அரசுக்கு வரியாகக் கிடைக்கும் தொகை, பேருந்து டயர் உதிரிப் பாகங்கள் கொள்முதல், காலாவதியான பேருந்துகளை ஏலம் போடுவதன் மூலம் வரும் வருமானம், நிர்வாகச் செலவுகள் தேவையற்ற ஆளுங்கட்சிக்கு ஆதரவாக வெளியிடப்படும் விளம்பரச் செலவுகள், அவர் களின் விளம்பரத்திற்காக நடத்தப்படும் அரசு விழாக்களுக்கு இலவசமாக ஓட்டப்படும் பேருந்து களுக்கான செலவுகள், நிர்வாகச்செலவுகள் ஆகியன குறித்து எந்த வெள்ளையறிக்கையும் முழுமையாக வெளிச்சத்துக்கு வந்ததில்லை.

மக்களின் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்ட பல பொதுத்துறை நிறுவனங்கள் நாடு முழுவதிலும் கடந்த 25 ஆண்டுகளாகத் திட்டமிட்டு தனியாருக்குத் தாரைவார்க்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டில் கூட மத்திய அரசு ரூபாய் 80 ஆயிரம் கோடி முதலீட்டை பொதுத்துறையிலிருந்து விற்று திருப்பிட முடிவெடுத்துள்ளது. அக்கொள்கைகளை அடியொற்றியே தமிழக அரசாங்கமும் தனியார் மயத்தை படிப்படியாக நடைமுறைப் படுத்துகிறது. அரசுப் போக்குவரத்துத்துறை அதற்கு விலக்கு அல்ல. அரசுப் போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான பணிமனைகள், கட்டிடங்கள் போன்றவற்றை விற்கும் திட்டங்கள் அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன.

### போக்குவரத்துத்துறை மக்களுக்கான சேவைத் துறையாகும்

“ஜனநாயக அரசு”, “மக்கள்நல அரசு” என்று தங்களைத் தாங்களே கூறிக்கொள்ளும் அரசாங்கம் மக்களின் அன்றாடத் தேவைக்கான சேவைத்துறை களை லாபநோக்கத்துடன் அணுகாது. குடிநீர், மருத்துவம், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து போன்றவற்றைச் சந்தைப் பொருளாதார வணிக நோக்கத்தின் அடிப்படையில் அணுகுவது முறையற்ற செயல், மக்களுக்கு இழைக்கப்படும் துரோகம். லாப–நஷ்டக் கணக்கு பார்ப்பதற்கு அரசாங்கம் என்பது ஒரு வியாபார நிறுவனமல்ல. இரண்டாவ தாக, தன் துறையில் ஏற்படும் நஷ்டத்திற்கான காரணத்தை கண்டறிந்து அதை களைவதன்மூலமே நஷ்டத்தை தவிர்க்கவேண்டுமேயல்லாது அப்பாவி மக்கள்மீது கட்டண உயர்வைத் திணிப்பது நியாயத் திற்குப் புறம்பான ஒரு அடாவடித்தனமாகும்.

ஆனால் மக்களுக்கான அத்தியாவசிய சேவை துறைகளையெல்லாம் இலாபமீட்டும் தொழில்களாக முதலாளிகளுக்குத் திறந்துவிட வேண்டும் என்ற உலகமயப் பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்திவருவதன் மூலம் மக்கள் விரோத அரசின் முதலாளி வர்க்கத் தன்மையும் ஆளும் கட்சியின் முதலாளித்துவ அணுகுமுறையும் வெட்ட வெளிச்சமாகிறது.

### 6 ஆண்டுகளாகக் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்கிற வாதம்

கடந்த 6 ஆண்டுகளாக கட்டணம் உயர்த்தப்பட வில்லை என அரசாங்கம் கூறுவது முழு உண்மை யல்ல. சென்றமுறை ஆட்சிக்கு வந்தவுடன் ஜெயலலிதா அவர்கள் மிகக் கடுமையான கட்டண உயர்வை திணித்தார். மேலும், அதிகாரபூர்வ கட்டண உயர்வு இல்லாமலேயே திட்டமிட்டு சாதாரண பேருந்துகள் குறைக்கப்பட்டது. எக்ஸ்பிரஸ், சொகுசு பேருந்து, பாயிண்ட் டு பாயிண்ட், எக்ஸ்பிரஸ் என்று நகர, தொலைதூர வழித்தடங்களில் பேருந்து

தொடர்ச்சி 2ம் பக்கம்

## பஸ் கட்டண உயர்வுக்கு எதிராக எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஆர்ப்பாட்டமும் பேரணியும்




ஜனவரி 22, 2018 அன்று சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநிலச் செயலாளர் தோழர் ரெங்கசாமி உரையாற்றுகிறார்




பிப்ரவரி 07, 2018 அன்று சென்னையில் நடைபெற்ற பேரணியில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மாநிலத் தலைவர்கள், சிபிஐ (எம் எல்) லிபரேஷன் கட்சி பங்கேற்பு

## தமிழ்நாடு அரசாங்கத்தின் பஸ் கட்டண உயர்வு

# ஊழலும் நிர்வாக முறைகேடுமே போக்குவரத்துத்துறை நஷ்டத்திற்கு காரணம்

1ம் பக்கத் தொடர்ச்சி




**ஜனவரி 22, 2018 அன்று தேனியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்**

களின் பெயர் மாற்றப்பட்டதன் மூலம் வேறு வடிவங்களில் கட்டணம் உயர்த்தப்பட்டதை நயவஞ்சகமாக அரசாங்கம் மறைக்கிறது.

ஒரேயடியாகக் கட்டணத்தை உயர்த்தாமல் படிப் படியாக உயர்த்திருக்கலாம் என்று முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களும் சமூகக்கருத்தாளர்களும் கூறிவருகின்றனர். முற்றிலும் கட்டண உயர்வை நியாயப்படுத்தும் அநியாயமான கருத்து இது. சுமார் மூன்றில் ஒரு பங்கு மக்கள் ரூபாய் 33க்கும் குறைவான கூலி பெறுகின்றனர் என்று மத்திய அரசாங்கமே சொல்கின்றது. மேலும், ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக மக்களின் வாங்கும் சக்தி உயரவில்லை: வேலைவாய்ப்பு பெருகவில்லை. சாலை, குடிநீர், கல்வி, மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை அரை நூற்றாண்டுகாலமாக இந்த அலங்கோலம் நீடிக்கின்றது. 6 ஆண்டுகளாகக் கூட்டப்படவில்லை என்பவர்கள் மேற்குறித்த உண்மையை மறைக்கும் அரைவேக்காட்டு அதிகார வர்க்க மனப்போக்கையே எதிரொலிக்கின்றனர். பெட்ரோல் விலை உயர்வு, பேருந்துக்கட்டமைப்பு, உதிரிப்பாகங்கள், பெயிண்ட், டயர் உள்ளிட்ட பொருட்களின் விலையை ஏற்றியது யார் என்ற கேள்வியை வசதியாக ஒதுக்கிவைக்கிறார்கள். இவை அனைத்தையும் நிர்ணயம் செய்யும் உரிமையைக் கொள்ளை லாபம் அடிக்கும் உரிமையை தனியாருக்கு வழங்கியது யார்? மத்திய, மாநில அரசாங்கங்கள் தானே!

### போக்குவரத்துத் துறையில் நஷ்டம் ஏன்

1970களில் நகரப்பேருந்துகளில் குறைந்தபட்சக் கட்டணம் 10 காசாகவே இருந்தது. ஒவ்வொரு ஸ்டேஜுக்கும் 5 காசு என கூட்டப்பட்டது. (இன்று குறைந்தபட்சக் கட்டணம் 5 ரூபாயாக ஏற்றப்பட்டு 1 ரூபாய் குறைந்து 4ரூபாயாக்கப்பட்டுள்ளது). முதல்வர்களாக இருந்த திருவாளர்கள் மு கருணாநிதி, எம் ஜி ஆர், செல்வி ஜெயலலிதா ஆகியோரின் அரைநூற்றாண்டு ஆட்சிக் காலக்கட்டத்தில் பலமுறை அநியாயமாகவே கட்டணம் உயர்த்தப்பட்டது. இத்தனை முறை ஏற்றியும் நஷ்டக்கணக்கு தொடர்கிறது.

போக்குவரத்துக்கு கழகத்திற்கு வருமானவரி, விற்பனைவரி (தற்போது GST) இருக்கைக் கட்டணம், வண்டி உரிமக்கட்டணம், இத்யாதி..இத்யாதி... என்று வரிகள் சுமத்தப்படுகின்றன. போடும் வரிகளில் சிலவற்றை குறைத்தால் போதும், வரவு–செலவு கணக்கில் ஏற்படும் இழப்பீட்டை எளிதாக ஈடுசெய்ய முடியும். மாறாக, இவற்றின் மூலம் அரசுக்கு வருவாய் கிடைக்கிறது. கட்டண உயர்வின் மூலம் இவை மறைமுகமாக மக்கள் தலையில் சுமத்தப்படுகின்றன.

மக்களின் வரிப்பணத்திலிருந்தே மாநில அரசாங்கம், பள்ளி மாணவர்களுக்கான இலவச பஸ்பாஸ் உள்ளிட்ட சில சலுகைகளை வழங்குகிறது. இலவச பஸ்பாசுக்கான மானியத்தொகையை மாநில அரசாங்கம் போக்குவரத்துத் துறைக்கு செலுத்தி யிருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால் போக்குவரத்துக் கழகத்துக்கு நிதி பற்றாக்குறை இந்த அளவுக்கு ஏற்பட்டிருக்காது. பல ஆண்டுகளாக இப்பணத்தை தமிழ்நாடு அரசாங்கம் கட்டத்தவறிய வருகிறது.

இழப்புக்கான காரணங்களில் முக்கியமான ஒன்றாக விபத்தும் விபத்து இழப்பீட்டுத் தொகையும் கூறப்படுகிறது. 5 லட்சம் கிலோ மீட்டர் அல்லது 7 ஆண்டுகள் என்பது பேருந்துகளின் ஆயுட்காலம். ஆனால், அப்பேருந்துகள் 2, 3 ஆண்டுகளிலேயே மிகுதியான தேய்மானத்தைச் சந்திக்கின்றன. மேலும் மக்கள் உயிரைப்பற்றிக் கவலைப்படாமல் காலா வதியானப் பேருந்துகளை வழித்தடங்களில் ஓடவிடு வதும் விபத்துக்களை அதிகப்படுத்துகிறது. தரமற்ற வாகன உதிரிப்பாகங்கள், இருக்கைகள் போன்றவை வாங்கப்படுவதால் அவை சீக்கிரம் தேய்ந்து பழுதடைந்துவிடுகின்றன. சிறுநகரங்கள், கிராமங்களுக்குச் செல்லும் சீரமைக்கப்படாத சாலைகளில் பேருந்துகள் செல்வதன் காரணமாக தேய்மானத்தின் அளவு அதிகரிக்கிறது. விபத்துக் கள் ஏற்படக் காரணமாகிறது. கிராமங்களுக்குச் செல்லும் சாலைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு என்றே ஒரு புதுத்துறை ஏற்படுத்தலாம். அந்த அளவுக்குக் குண்டுங்குழியுமாய் கல்லும் முள்ளும் நிறைந்த உருக்குலைந்த சாலைகளாகவே பலவும் இருக்கின்றன. விபத்திற்கு இழப்பீடுத் தொகை வழங்கிடுவதால் போக்குவரத்துத் துறைக்கு நஷ்டம் ஏற்படுகிறது என அரசாங்கம் கூறுகிறது. ஆனால், தரமற்ற உதிர்ப்பாகங்களுடன் பேருந்துகளை இயக்குவதும் சாலைகளைச் சீரமைக்கப் போதுமான நடவடிக்கை எடுக்காததும், சாலைப் பணிகளில் ஒப்பந்ததாரர்களும், ஆளுங் கட்சியினரும் அதிகாரிகளும் அடிக்கும் சுயலாபக் கொள்ளையுமே இதற்கான காரணம்.

அடுத்து, உதிரிப் பாகங்களின் விலை உயர்வு ஒரு காரணமாக கூறப்படுகிறது. உதிரிப் பாகங்களின் விலையை தங்கள் இஷ்டத்திற்கு தனியார் நிர்ண யிப்பதை அடிபணிந்து ஏற்றுக்கொண்டு ஏன் கொள்முதல் செய்யவேண்டும்? அரசு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி குறைந்த விலையில் உதிரிப் பாகங்களை கொள்முதல் செய்வதை யார் தடுத்தார்கள்? அரசாங்கத்தின் தனியார்மய ஆதரவு நிலைப்பாடே இதில் வெளிப்படுகின்றது. பேருந்து பழுதுபார்ப்பு, உதிரிப் பாகங்கள் கொள்முதல், டயர் ரீட்ரேடிங் என அனைத்து அம்சங்களிலும் தனியார் லாபக்கொள்ளையடிப்பதை அரசாங்கம் தீவிரமாக ஆதரித்து வருகிறது. இதன் மூலம் அரசுப் போக்கு வரத்தை அழித்து, ஒழித்துவருகிறது. சொல்லப் போனால் அரசாங்கத்தின் தனியார்மயக் கொள்கை அமலாக்கத்தின் ஒருபகுதியாகவே இப்பேருந்து கட்டண உயர்வு இருக்கின்றது.

தனியார்மயமாக்கலின் ஒரு அம்சமாக, விரைந்து செல்லும் பைபாஸ் சாலைகள் போடப்பட்டு டோல்கேட்டுகள் அமைக்கப்பட்டன. அனைத்து நான்கு சக்கர வாகனங்களுக்கும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த புதுவகைத் தண்டச் செலவும் பேருந்துகளின் தலையில் ஏறி, போக்கு வரத்துக் கழகங்களின் செலவை அதிகரிக்கிறது. சாலைகள் போடச் செலவான தொகையை விட பலமடங்கு அதிகத்தொகை பெரும்பாலான இடங் களில் வசூலிக்கப்பட்டுவிட்டதை நீதிமன்றங்கள் சுட்டிக்காட்டிய பின்னரும் வசூல்வேட்டை நிறுத்தப்படவில்லை. இதைப்பற்றிப்பேச மறுக்கிறது தமிழ்நாடு அரசாங்கம். மேலும் டோல்கேட்டுகளி லிருந்து அரசுப் பேருந்துகளுக்கு விலக்களிக்கும் சட்டத்தை அல்லது விதியை இயற்றுவதிலிருந்து அரசை தடுத்தது யார்? ஏன் விலக்கு பெறவில்லை? டோல்கேட் மூலம் அரசு போக்குவரத்தின் பணத்தை தனியார் கொள்ளையடிக்க அனுமதித்த அரசாங்கத்தை கண்டிக்க வார்த்தைகளே இல்லை.

புரையோடிவிட்ட ஊழலும் நஷ்டத்திற்கு முக்கியக் காரணமாகும். 1980களின் நடுப்பகுதியில் ஈரோடு பணிமனையில் பேருந்துகள் ஏலமிடப்பட்டதிலும் புதிய பேருந்துகள் வாங்கியதிலும் சுமார் ஒன்றரைக்கோடி ரூபாய் (இன்றைய மதிப்பில் பல நூறு கோடிகள்) அளவுக்கு ஊழல் நடந்துள்ளது என்ற குற்றச்சாட்டு இங்கு நினைவு கூறத்தக்கது.

### டீசல் விலை உயர்வு

கீத் பாரத் கமிட்டியின்பரிந்துரைப்படி பெட்ரோல், டீசல் விலை நிர்ணயிப்பின் மீதான அரசுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. உலகச் சந்தையைப் பிடிக்கும் நோக்கத்துடன் மட்டுமின்றி இந்நாட்டு மக்களை ஒட்டச்சுரண்டியது போதா தென்று, வெளிநாட்டுத் தொழிலாளர்களையும் மக்களையும் சுரண்ட அந்நிய மூலதனத்துடன் இந்திய ஏகபோக முதலாளித்துவம் சேர்ந்து செயல்பட 90களுக்குப் பின் உலகமய, தனியார்மய, தாராளமய கொள்கைகள் கொண்டுவரப்பட்டன. மத்தியில் காங்கிரஸும் பாஜகாவும் அதனுடன் அவ்வப்போது கூட்டணி வைத்த மாநிலக் கட்சிகளும் இக்கொள்கைகளை நடைமுறைப் படுத்தி வருகின்றன. அதன் ஒரு பகுதியாக அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்த பெட்ரோலியப் பொருட்களுக்கான விலை நிர்ணயம் செய்யும் உரிமை கீத் பாரத் கமிட்டியின் பரிந்துரைப்படி அரசின் கட்டுப்பாட்டிலிருந்து அகற்றப்பட்டது (De regulation). அதன்விளைவாக நாள்தோறும் பெட்ரோல், டீசல் விலை உயர்ந்து வருகின்றன. உலகச்சந்தை விலையுடன் இணைக்கப்பட்டதாகக் கூறி ஒவ்வொரு சூரிய உதயத்தின் போதும் விலை ஏற்றப்பட்டு உச்சிவெயிலாகச் சுட்டு மக்களை வாட்டிவருகிறது. ஆனால், உலகச்சந்தையில் ஒரு பேரல் 146 டாலர் இருந்த விலை இப்போது 50 டாலராக குறைந்துவிட்டது. இருந்தும் தொடர்ந்து விலை ஏற்றப்படுகிறது. எண்ணை இயற்கை எரிவாயுத்துறையில் செயல்பட்ட அரசுத்துறை களின் எண்ணை வயல்களை ஒருசில தனியார் ஏகபோகங்களுக்கு வழங்கி அவை உலகப் பெரும் பணக்காரர்கள் பட்டியலில் இடம்பெறமுடிந்த தற்கு யார் காரணம்? இந்த தனியார்மயத்தால் ஏற்பட்ட டீசல் விலையுயர்வை மக்கள் தலையில் ஏன் சுமத்த வேண்டும். மேலும் டீசலுக்கு மாநில அரசாங்கம் விதித்திருக்கும் வரியை போக்கு வரத்துத் துறையிடமும், அதன்மூலம் இறுதியில் மக்களிடமும் ஏன் வசூலிக்க வேண்டும்.

### போக்குவரத்துத் துறைக்குள் இலாபகரமாக இயங்கும் தனியார் ஒப்பந்தப் பணிகள்

அரசுப் பேருந்து பராமரிப்பின் அனைத்து செயற்பாடுகளும் கழகங்கங்களே முன்பு செய்து வந்தன. பழுதுபார்த்தல், பெயிண்டிங், பாடி பில்டிங், டீசல் நிரப்புதல் என பெரும்பாலான பராமரிப்புப் பணிகள் போக்குவரத்துக்கழக

தொடர்ச்சி 11ம் பக்கம்






**பிப்ரவரி 4 முதல் 7 வரை பஸ் கட்டண உயர்வுக்கு எதிராக மதுரை–திண்டுக்கல்–தேனி மாவட்டங்களின் பல்வேறு இடங்களில் வாகனப் பிரச்சாரத்தின் போது எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தோழர்கள் பொது மக்களிடம் கையெழுத்து பெறுகின்றனர்**

## எஃப் ஆர் டி ஐ மசோதா 2017

# மக்களின் வங்கி சேமிப்பு மீதான மரண அடி

இந்நாடு காணாத அளவிற்கு அறுதிப்பெரும் பான்மையுடன் தன்னை ஆட்சியில் அமர்த்திய இந்திய ஏகபோக முதலாளிகளுக்கு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசாங்கம் செய்கின்ற கைம்மாறுக்கு அளவே இல்லை. நிதித்துறையில் மேற்கொள்ளும் தடாலடியான நடவடிக்கைகள் இதற்கு சான்றாகும். நாடே அணிதிரண்டு எதிர்த்தாலும் தனது எஜமானர்களான இந்திய முதலாளிகளின் தணியாத லாபப்பசிக்கு அறுசுவை விருந்து படைப்பதற்காக மத்திய பாஜக தலைமையிலான அரசாங்கம் சாமானிய மக்கள் மீது தொடர்ந்து மரண அடி தொடுத்துவருகிறது.

முதலில் 'கருப்புப் பணத்தை ஒழிக்கிறோம்' 'ஊழலை தடுக்கிறோம்' என்ற பொய்யான காரணத்தைக்கூறி புழக்கத்திலிருக்கும் 86சதவீத கரன்சிகளின் பணமதிப்பு நீக்கம் அறிவிக்கப்பட்டது. அதன்பிறகு, ஒரே நாடு ஒரே வரி என்ற பெயரில் ஜிஎஸ்டி மசோதாவை சட்டமாக்கி வரிவலையை விரிவாக்கி சாமானிய மக்கள் பலரை அவ்வலைக்குள் சிக்கவைத்தது. பெரிய தொழில் முதலைகளும் கார்ப்பொரேட் திமிங்கிலங்களும் வங்கிகளிடமிருந்து பெருந்தொகை கடன்களை ஏப்பம்விட்டு திருப்பித் தராமல் ஏமாற்றியதால் திவால் நிலைக்குச் சென்றுள்ள வங்கிகளை காப்பதற்காக மக்கள் பாடுபட்டு ஈன்ற சேமிப்புக்களை பகிரங்கமான அபகரிக்கும் எஃப்ஆர்டிஐ (ஃபைனான்சியல் ரெஷல்யூசன் அண்ட் டெபாசிட் இன்சூரன்ஸ்–2017–நிதித்தீர்வு மற்றும் வைப்புத்தொகை காப்பீட்டு மசோதா 2017) எனும் மசோதாவை தற்போது அறிமுகப் படுத்தியுள்ளது.

வழக்கம்போல, உண்மையை மூடி மறைத்து மக்களை ஏமாற்றுவதற்கு அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. முதலாளித்துவ அரசானது மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒவ்வொரு முறையும் அவற்றை மக்கள் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக ஆளும் வர்க்கத்தின் ஏஜெண்டுகளையும், அதற்கு வால் பிடித்து பிழைப்பை ஓட்டிக் கொண்டிருக்கும் ஊடகங்களையும், அதற்கு வக்காலத்து வாங்கும் பொருளாதார நிபுணர்கள், பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுவோர், தொலைக்காட்சிகளில் கருத்துரை வழங்குவோர் என அனைவர்மூலமும் கட்டுக்கதைகள் பலவற்றை அவிழ்த்துவிட்டு மக்களை குழப்பவும் ஏமாற்றவும் செய்யும். இதே யுக்தியைத்தான் இந்த எஃப்ஆர்டிஐ மசோதாவை நிறைவேற்றுவதிலும் அவர்கள் கையாளுகின்றனர். இதற்கு முன்பும்கூட மார்க்சிசம்–லெனினிசம்–சிப்தாஸ் கோஷ் சிந்தனை எனும் ஆயுதம்தரித்த எமது கட்சி பணமதிப்பு நீக்கம், ஜிஎஸ்டி, தேன்தடவிய அறிவிப்புக்களை கொண்ட பட்ஜெட் ஆகியவற்றின் பின்னுள்ள கொடிய சதித் திட்டத்தை அம்பலப்படுத்தினோம். அவை மக்கள் வாழ்வின்மீது பேரழிவை ஏற்படுத்திய அனுபவத்திலிருந்து மார்க்சிய விஞ்ஞான முறையியலின் மீதமைந்த எமது ஆய்வுகள் எவ்வளவு சரியானவை என்பது நிரூபிக்கப்பட்டது. அவ்வாறான பகுத்தாராய்வின் மூலம் என்னென்ன அபாயங்கள் இம் மசோதாவில் பதுங்கியுள்ளன என்பதை எளிதில் கண்டறிய இயலும்.

### சுய முரண்பாடுகளில் சிக்கியுள்ள வஞ்சகத் திட்டம்

கடந்த 10.08.2017 அன்று இம் மசோதாவை மத்திய அரசாங்கம் லோக்சபாவில் தாக்கல் செய்தது. தற்போது இம்மசோதா பாராளுமன்ற கூட்டுக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காக இம்மசோதா பற்றி அரசாங்கம் அவிழ்த்துவிடும் கட்டுக்கதைகளாவன:

1. இதர பல வரம்புகளைக் காட்டிலும் இந்த மசோதாவின் ஷரத்துக்கள் மிக அதிக அளவில் டெபாசிட்தாரர்களுக்கு சாதகமானது.

2. ஒட்டுமொத்தமான தீர்வுக்கான முறையை சேர்ப்பதன் மூலம் அமைப்பு முறையை வலுப்படுத்தும்.

3. நிதி நிறுவனங்கள் மற்றும் டெபாசிட்தாரர்களின் நலன்களை முழுவதுமாக பாதுகாப்பது தான் அரசாங்கத்தின் குறிக்கோளாகும்.

இவ்வாறாக நிதியமைச்சர் தனது டிவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த வாக்குறுதிகள் எந்த அளவிற்கு செல்லுபடியாகக் கூடியவை எனக் காண்போம். முதற்கண், மக்கள் நலன்களை பாதுகாப்பதிலும் மக்களின் பணத்தை பாதுகாப்பதிலும் அரசாங்கம் காட்டும் அக்கறை குறித்து கடந்த கால அனுபவங்கள் என்ன? அன்றாடம் அதிகரிக்கும் விலைவாசி, கட்டண உயர்வுகள் போன்றவை ஒருபுறமும், மறுபுறத்தில் வீழ்ந்துவரும் உண்மைக் கூலி, குறைந்துவரும் வேலைவாய்ப்புகள், அதிகரிக்கும் ஆட்குறைப்புகள் ஆலைமூடல்கள், விளைபொருட்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்காமை, வாழ்வாதாரங்கள் சுருங்கிவருதல், போன்றவற்றாலும் மக்களின் வாழ்க்கை தாங்கொணா துன்பக்கடலாக விளங்குகிறது. பசியும், பட்டினியும், பிணியும் மட்டுமே பலருக்கு எஞ்சியுள்ளது. வானமே கூரையாக வாயுவே உணவாகக் கொண்ட மக்கள் வெறுமனே உயிர்பிழைத்துக் கிடப்பதற்கே கொத்தடிமைகளாவது, தங்கள் உடல் உள்ளுறுப்புகளை விற்பது, குழந்தைகளையும் தங்கள் குடும்பத்துப் பெண்களையும் விற்பது, அபாயகரமான வாடகைத் தாயாக ஆவது, பெண்கள் தங்கள் உடலை விற்பது போன்றவை மட்டுமின்றி, கொலை, களவு, அடியாளாக வேலை செய்வது உள்ளிட்ட பல்வேறு நெறிபிறழ்ந்த வாழ்க்கை முறைக்கும் தள்ளப்படுகின்றனர். மேன்மேலும் சுரண்டலுக்கு வழிகோலும் இந்த அமைப்பு முறையில் மக்களின் வாழ்வு மேன்மேலும் துன்பச்சுமையாகி வருகின்றது. ஓட்டாண்டிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. கடுமையான பொருளாதார தாக்குதல்களையும் மோசமான ஏமாற்று, வஞ்சகத்தையும் தாங்கமுடியாத பல ஏழை விவசாயிகளும் வேலையிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட தொழிலாளர்களும் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில், ஏழை, நடுத்தர மக்கள் தம் கைவசம் வைத்திருக்கும் மிச்சம் மீதி பணத்தையும் சுருட்டிக்கொள்வதற்கு அரசாங்கம் ஏற்கனவே பல பொருளாதார தாக்குதல்களை திட்டம் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறது. இவை போதாதென்று, வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி வயோதிகத்திலோ, எதிர்பாராத தேவைகளை சமாளிப்பதற்காகவோ ஏழை, நடுத்தர மக்கள் சிறுகச்சிறுக சேர்த்துவைக்கின்ற சிறு சேமிப்பையும் கபளீகரம் செய்வதற்கு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தேசிய சேமிப்புத் திட்டத்தில் சேமிக்கப்படும் தொகை, வங்கி சேமிப்புகள் ஆகியவற்றுக்கான வட்டியை தொடர்ந்து குறைத்துக்கொண்டே வருகிறது. இந்த சேமிப்புகள் பாதுகாப்பனவை என இதுகாறும் கருதப்பட்டு வந்தன. இந்திய ரிசர்வ் வங்கி தனது காலமுறை பணக்கொள்கையை (Periodic Monetary Policy)யை அறிவிக்கும்போதெல்லாம் மேலும் வட்டி விகிதம் குறைந்துவிடுமோ என்று மக்கள் அச்சம் கொள்கின்றனர். ஒரு சில நாட்களுக்கு முன்பு கூட தேசிய சேமிப்பு பத்திரங்களுக்கான வட்டி விகிதத்தை மேலும் குறைப்பதாக ஆரவாரமாக அறிவித்தது. இவையெல்லாம் மக்கள் மீது கொண்ட அக்கறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளா என்ன?

கடனுக்கான வட்டி விகிதத்தை குறைத்தால் மட்டுமே தொழில்களுக்கு கடன் வழங்குதல் பாதிக்கப்படாமல் இருக்கும் என அரசாங்கமும் அதற்கு ஜால்ரா போட்டு பிழைப்பு நடத்தும் பொருளாதாரவாதிகளும் கூறி வருகின்றனர். வங்கி நிதி என்ற வடிவத்தில் மூலதனம் சப்ளை செய்யப்படவில்லை என்றால் தொழில்கள் செழிப்பதும் அதன் விளைவாக பொருளாதாரம் வலுப்பெற்று அதிக வேலை வாய்ப்புகளை எவ்வாறு உருவாக்கும் என அவர்கள் வாதிடுகின்றனர். ஆனால், நாம் அவர்களிடம் கேட்கின்ற கேள்வி என்னவெனில், புதிதாக தொழில்கள் தொடங்குவது ஒருபுறமிருக்க, தற்போது இருக்கின்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி நிறுத்தப்படுவதும் ஆலைகள் மூடப்படுவதும் ஏன் நிகழ்கின்றன என்பதாகும். இந்த ஆலைகள் மூடப்படுவதற்கு மூலதனம் இல்லாததா காரணம்? அல்லது முதலாளித்துவத்தின் உட்பொதிந்துள்ள விதியாகிய, ஈவிரக்கமற்ற சுரண்டல் காரணமாக மேன்மேலும் வறுமையில் தள்ளப்படும் மக்களுடைய வாங்கும் சக்தி வீழ்ந்து வருவதால், சந்தை சுருங்குவதன் காரணமாக உற்பத்தியாகும் சரக்குகள் விற்கப்படாமல் தேங்கி நிற்பதாலா? ஏற்கெனவே உற்பத்தியான பொருட்கள் விற்கப்படாமல் தேங்கி ஆலைகள் மூடப்படுகையில் ஆலை அதிபர்கள் புதிதாக மூலதனம் போட்டு தொழில் தொடங்கி நஷ்டம் அடைய முற்படுவரா? மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.3சதவிகித மதிப்புடைய முதலீடுகள் "தொங்கலில்" இருப்பதாக, அதாவது நிறுவப்பட்டிருக்கவேண்டிய தொழில்கள் சந்தை நெருக்கடி காரணமாக, நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்று 2015ம் ஆண்டுக்கான பொருளாதார சர்வேயில் குறிப்பிடப்பட்டிருந்தது. நிறுத்திவைக்கப்பட்ட இந்தத் தொழில்கள் பின்னர் தொடங்கப்பட்டனவா என கடந்த இரண்டாண்டுகளில் நிதி அமைச்சர் எந்த விவரமும் அளிக்கவில்லை. இந்த உண்மையை எல்லாம் வெளியே சொல்லி தனது எஜமானர்களை அவர் அம்பலப்படுத்த மாட்டார் என்பதை நாம் அறிவோம். எனவே, அவரும் பிரதமரும் இதர அமைச்சர்களும் கட்டுக்கட்டாக பொய்களைச் சொல்லி இந்த எஃப்ஆர்டிஐ மசோதா பற்றிய உண்மையை மூடி மறைத்து மக்களை ஏய்க்கப்பார்க்கிறார்கள்.

### வங்கித் துறையின் தற்போதைய உண்மை நிலைமை

உண்மையில் ஒட்டுமொத்த வங்கித்துறையும் தற்போது உயிர் பிழைத்திருக்க முடியாமல் மூச்சு

தொடர்ச்சி 4ம் பக்கம்

## ஜனவரி 21 : பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் லெனின் அவர்களின் 94வது நினைவுதினம்




சென்னையில் ஜனவரி 20, 2018 அன்று மாபெரும் லெனின் அவர்களின் நினைவுதினக் கூட்டத்தில் மாநிலச் செயலாளர் தோழர் ரெங்கசாமி உரையாற்றுகிறார்

## எஃப் ஆர் டி ஐ மசோதா 2017

# முதலாளித்துவ நெருக்கடியாலும் பேராசையாலுமே வங்கிகள் நலிவுறுகின்றன

3ம் பக்கத் தொடர்ச்சி

முட்டிக்கொண்டிருக்கிறது. புதிதாக கடன் வாங்குவதற்கு அபூர்வமாகத்தான் ஆட்கள் கிடைக்கிறார்கள். அதே சமயம், வராக்கடன்களின் மதிப்போ 11 லட்சம் கோடியைத் தாண்டிவிட்டதாக தகவல்கள் வருகின்றன. இதில் 60%க்கும் அதிகமான தொகை பொதுத்துறை வங்கிகளை சார்ந்தவையாகும். இது மட்டுமின்றி, ஸ்ட்ரெஸ்ட்டு சொத்துக்கள் (Stressed Assets) தொகை (அதாவது திரும்பச்செலுத்தப்பட மாட்டாது என்று நன்றாகத் தெரிந்த கடன்கள்) கணிசமான அளவிற்கு உள்ளது. இந்த ஸ்ட்ரெஸ்ட்டு சொத்துக்கள் வரா கடன்கள், சந்தேகத்திற்கிடமான கடன்கள், மறுசீரமைக்கப்பட்ட கடன்கள் என பல வகைகளைச் சேர்ந்த கடன்கள் ஏறக்குறைய 15 லட்சம் கோடிகளாக உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை பெரும் ஏகபோக தொழில் நிறுவனங்களால் திரும்பச் செலுத்தப்படாதவை ஆகும். நிலுவையிலிருக்கும் கடன் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு வெறும் 24 தொழில் நிறுவனங்களால் நிலுவையில் வைக்கப்பட்டிருப்பவை ஆகும். திரும்பச்செலுத்தப்பட வேண்டிய கடனில் பெரும்பாலானவை பெரும் ஏகபோக நிறுவனங்களாலேயே ஏன் செலுத்தப்படாமல் உள்ளன என்பதற்கு பிரதமரும் நிதியமைச்சரும், வரிந்து கட்டிக்கொண்டு வரையும் பொருளாதார கட்டுரையாளர்களும் பதில் சொல்வார்களா? இவர்களுடைய பொருளாதார கருத்தியலின்படி, கடன் திருப்பிச்செலுத்தும் அளவிற்கு இந்த கம்பெனிகள் போதுமான வருவாய் ஈட்டவில்லை என்றுதானே பொருள்? இவர்களுடைய வாதத்தின் படியே தொழில்கள் மூலதனத்தை நாடவில்லை, முதலீட்டை ஈர்க்கவில்லை என்றே எடுத்துக் கொண்டாலும், வட்டியை குறைப்பதால் மட்டும் முதலீட்டுக்கான தேவை எப்படி அதிகரிக்கும்? கடன் பெறுவதற்கு ஆள் இல்லை என்ற உண்மை வங்கிகளின் நிலை பற்றிய உள்விவரங்கள் அறிந்தோருக்கு நன்கு தெரியும். நுகர்வோர் கடன், வீட்டுக்கடன் போன்றவை பெறுவதில்கூட சுணக்கம் காணப்படுகிறது. பரந்துபட்ட அளவில் மக்களின் வருமானம் பெருமளவில் குறைந்து வருவதே இதற்குக் காரணமாகும். இதன் காரணமாக வங்கிகளின் வருவாய் குறைந்து வருகிறது. வங்கிகள் தொடர்ந்து நீடித்திருப்பதே கேள்விக்குறியாகியுள்ளது. அதனால்தான், ஏதேதோ செய்து எப்படியாவது தொழிலில் நீடித்திருக்கவேண்டும் என்பதற்காக வட்டியைக் குறைத்து கடன் பெறுவோரை ஈர்ப்பது, நீண்டகால வைப்புத் தொகையை ஊக்கப்படுத்தாமலிருப்பது, வங்கிகளை ஒன்றோடொன்று இணைப்பது, வங்கிச் சரக்குகள் அல்லாத பிற பொருட்களான காப்பீடுகள், பரஸ்பர நிதி, பாண்டுகள் விற்பது போன்ற நடவடிக்கைகளில் வங்கிகள் ஈடுபடுகின்றன.

### தீர்க்கவியலாமல் அதிகரித்து வரும் முதலாளித்துவ நெருக்கடி வங்கித் தொழிலை நலிவடையச் செய்கிறது

முதலாளித்துவ அமைப்புமுறை உருவாகி வளர்ந்த அந்த ஆரம்ப காலத்தில் வங்கி அமைப்பு முறை உருவானது. பிரதானமாக, வளர்ந்து வரும் தொழிலதிபர்களின் மூலதனத் தேவையை பூர்த்தி செய்வதற்காக மக்களிடமுள்ள பணத்தை ஒருங்கு திரட்டி வழங்குவதற்காக உருவானதுதான் வங்கிகள் என்பது உண்மையாயினும், இவ்வாறு செய்யும் வேளையில் மக்களின் பணத்தையும் பாதுகாத்து, அவர்களது வருவாயை பெருக்கிட வட்டியும் தந்தது என்ற வகையில் அது ஓரளவிற்கு சமூகத் தேவையையும் பூர்த்தி செய்தது. ஆனால், முதலாளித்துவம் வளர்ந்து, ஏகபோகத் தன்மையடைந்து தனது முற்போக்கு குணாம்சங்களை இழந்து இனியும் வளர முடியாது என்ற நிலையில் அதன் தேய்மானம் துவங்கியபின், அது பிற்போக்காகிவிட்ட இன்றைய நிலையில், தனது குறுகிய, சொந்த வர்க்க நலன்களை, அதாவது எப்படியாவது செல்வத்தை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் திட்டமிட்டு விதிகளுக்குப் புறம்பான தீயவழியில் வங்கித்துறையை முடிந்தஅளவிற்கு பயன்படுத்திக்கொள்கிறது. இதன்மூலம் தனது அகோர லாபப் பசிக்குத் தீனி தேடிக்கொள்கிறது. இதற்காக, டெபாசிட்தாரர்களின் நலனைப் பற்றி கிஞ்சித்தும் கவலை கொள்வதில்லை. வங்கிகளில் டெபாசிட் செய்யப்பட்ட மக்கள் பணத்தின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதற்கு பதிலாக பல புதிய யுக்திகளை கையாண்டு மக்கள் பணத்தை கையாடல் செய்வதற்கே முயல்கிறார்கள். இதனால் ஒட்டுமொத்த வங்கி அமைப்பு முறையும் ஆட்டங்கண்டு வீழ்ந்துபோகுமாயினும் அதைப் பற்றியும் அவர்கள் கவலைப்படப்போவதில்லை. டெபாசிட் செய்தவர்களை பிச்சைக்காரர்களாக்கவும் அவர்கள் தயங்கவில்லை. இதற்கேற்றாற்போல சட்டங்கள் இயற்றப்படுகின்றன; திருத்தப்படுகின்றன. எனவே, முதலாளித்துவத்துடன் ஒட்டியே பிறந்து, அதிகரித்துவரும் நெருக்கடியும் அவர்களின் அதீத லாபப்பசியும் பேராசையுமே வங்கித்துறை நலிவிற்குக் காரணமாகும்.

### நலிவடைந்திருப்பது வங்கிகளும் தொழில்களுமே அன்றி தொழிலதிபர்களும் ஏகபோக முதலாளிகளும் அல்ல

வங்கிகளும் தொழில்களும் நலிவடைவதால் தொழிலதிபர்களும் நலிவடைந்து நஷ்டத்தையும் கஷ்டத்தையும் சந்திப்பர் என்று யாருக்கும் இயல்பாக தோன்றும். ஆனால் உண்மை இதற்கு முற்றிலும் புறம்பானதாகும். சில புள்ளிவிவரங்கள்:

க்ரெடிட் ஸ்விஸ் என்ற நிறுவனத்தின் அறிக்கையின்படி ரிலையன்ஸ் குழுமம் செலுத்த வேண்டிய வங்கிக்கடன் தொகை 1.25 லட்சம் கோடியாகும். நிலுவைக் கடன் பட்டியலில் அதிக பட்ச நிலுவை வைத்திருக்கும் நிறுவனம் இதுவே. ஆனால், இதன் உரிமையாளரான முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு கடந்த ஓராண்டில் மட்டும் முன்பிருந்ததைவிட ஒரு லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளது. அதாவது, கடந்த ஓராண்டில் அவரது சொத்து மதிப்பு 67% அதிகரித்துள்ளது. ஆசியா கண்டத்தின் பணக்காரர்கள் வரிசையில் முதல் ஐந்து இடத்தில் முகேஷ் அம்பானி வந்துள்ளார். (Zee News - 05.10.2017) உண்மையில் கடனை திரும்பச்செலுத்தாதிருக்கும் எந்த தொழிலதிபருடைய சொத்தும் குறையவில்லை. மாறாக, அத் தொழிலதிபருடைய சொத்து அதிகரித்துக்கொண்டேதான் வருகிறது. ஃபோர்ப்ஸ் இந்தியா நிறுவனம் வெளியிட்ட 2017ம் ஆண்டுக்கான பணக்காரர்கள் பட்டியலின்படி பெரும் தொழிலதிபர்கள் அனைவரின் செல்வமும் அதிகரித்திருப்பதும் அவர்களின் ஒட்டுமொத்த சொத்து மதிப்பு 26% அளவிற்கு உயர்ந்துள்ளது. அதாவது அவர்களின் ஒட்டுமொத்த சொத்து 31 லட்சம் கோடிக்கும் அதிகமாகும்.

தொழில் நலிவடைந்து தனது நிறுவனம் நஷ்டத்தை சந்திக்கப் போகிறது என்பதை ஒரு முதலாளி முன்கூட்டியே உணர்ந்துவிட்டால் அக்கணத்திலேயே தனது லாபத்தையும் முதலீட்டுத் தொகையையும் சத்தமின்றி தனக்கு சொந்தமான வேறு இடத்தில் பதுக்கிவிட்டு நிறுவனம் திவாலாகும்போது தன்னால் கடனை திருப்பிச் செலுத்த முடியாது என்று கைவிரித்துவிடுவார். பங்குச் சந்தையின் ஊக வணிகத்தில் ஈடுபடுவதற்காக பெரும் தொழிலதிபர்கள் அனைவருமே சொந்த இடைத்தரகு நிறுவனங்களை (Broker Firms) கொண்டிருக்கிறார்கள் என்பதும் அந்நிறுவனங்கள் மூலம் பங்குச் சந்தையில் விளையாடி மிகக் குறுகிய காலத்தில் லாபம் பார்க்கிறார்கள் என்பதும் ஊரறிந்த ரகசியமாகும். யாருடைய பணத்தைக் கொண்டு இவர்கள் இவ்வாறு விளையாடுகிறார்கள்? நியாயமாக நடத்தப்படும் எந்தவொரு புலனாய்வும் தொழில் துவங்குவதற்கென்று வங்கியிலிருந்து பெறுகின்ற கடனைக்கொண்டுதான் இவர்கள் பங்குச் சந்தையில் ஊக வாணிபம் செய்து லாபமீட்டுகிறார்கள் என்பதை நிரூபிக்கும். ஆனால், இதே கடனை திருப்பிச் செலுத்துவது என்ற கேள்வி எழும்போது தொழில் நலிவு, நஷ்டம் போன்ற பல்லவிகளைப்பாடி கைவிரித்து விடுகின்றனர். இவ்வாறாக, பெரும் நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்கள் திரும்பச் செலுத்தப்படாததால்தான் வங்கிகள் நலிவடைகின்றன. ஆக, பெரும் தொழில் நிறுவனங்களும் ஏகபோக முதலாளிகளும் அரசாங்கம், வங்கிகளின் மேல்மட்ட நிர்வாகம் ஆகியவற்றின் துணையோடு செய்யும் சதியின் விளைவுதான் வங்கித்துறையின் நலிவு ஆகும். எனவே, வங்கித்துறை திவாலாவது செயற்கையாக உருவாக்கப்பட்டதாகும்.

### சதிக்குத் துணைபோகும் அரசாங்கங்கள்

வங்கிகளில் சேமிக்கப்பட்ட மக்கள் பணத்தை தெரிந்தே களவாடி செயற்கையாக திவால்கள் உருவாக்கப்படுகின்றன என்ற இந்த உண்மையை அரசாங்கங்கள் மூடி மறைக்கின்றன. மக்களை ஏமாற்றும் இந்தச் செயலை அரசாங்கம் திரும்பத் திரும்ப மன்னித்துவிடுகிறது. கடன் கட்டாத நிறுவனங்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டி அவர்கள் மீது பரிதாபப்பட்டு அவர்களது கடனை தள்ளுபடி செய்துவிடுகிறது. இதனால் வங்கிகள் சந்திக்கும் நஷ்டத்தை ஈடுகட்டி வங்கிகளை மீட்டெடுப்பதற்கு அரசு கஜானாவிலிருந்து மக்கள் வரிப்பணத்தை வங்கிக்கு கொடுக்கிறது. இதைத்தான் முதலாளித்துவ பொருளாதாரத்தில் "மறு முதலீடு செய்தல்" (recapitalisation) எனப்படுகிறது. நஷ்டத்தில் இயங்கும் வங்கிகளில் 2.11 லட்சம் கோடி அளவிற்கு மறுமுதலீடு செய்யப்போவதாக அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துவிட்டது. இதுதான் 'பெய்ல் அவுட்' எனப்படும் மீட்டெடுத்தல் ஆகும்.

ஆனால், ஒரு சாமானிய மனிதன் விவசாயக் கடனோ அல்லது சிறு, குறு தொழிலுக்கான கடனோ அல்லது நுகர்வோர் கடனோ அல்லது கல்விக் கடனோ வாங்கிவிட்டு உண்மையிலேயே நஷ்டம் ஏற்படுவதாலோ அல்லது கஷ்ட ஜீவனத்தின் காரணமாகவோ ஒரு சில ஆயிரம் ரூபாய் தவணை தவறினால்கூட அவர்கள் வீட்டையோ நிறுவனத்தையோ ஜப்தி செய்வதும் அவர்களை அடியாட்களைவைத்து மிரட்டுவதும் என பயங்கரமான நடவடிக்கைகளை வங்கிகள் மேற்கொள்கின்றன. விளைச்சல் பொய்த்துப்போனாலோ, தங்கள் விளைச்சலுக்குரிய விலை கிடைக்காததாலோ வங்கிக்கடனை கட்ட தவறும் ஏழை விவசாயியின் நிலம் அல்லது அசையும், அசையா சொத்து ஏதேனும் இருந்தால் அது பறிமுதல் செய்யப்படுகிறது. ஆனால், கடன் திருப்பிச்செலுத்தாத ஏகபோக நிறுவனங்களும் கார்ப்பொரேட்டுகளும் நடத்தப்படும் விதம் வேறு. அதுமட்டுமல்ல, மேலும் அவர்கள் புதிய கடன் பெறுவதற்குரிய தந்திரமான வழிவகைகளையும் அரசு செய்துதருகிறது.

தமிழகத்திலேயே மதுரை அனுப்பானடியை சேர்ந்த லெனின் என்ற மாணவர் கல்விக்கடனை திரும்பச் செலுத்தாததால் குண்டர்களை ஏவிவிட்டு அக்குடும்பத்தாரை மிரட்டியதால் மனமுடைந்து அம்மாணவன் தற்கொலை செய்துகொண்ட துயரச் சம்பவமும் தஞ்சை மாவட்டத்தின் ஒரத்தநாடு சேர்ந்த விவசாயி ஒருவர் ட்ராக்டர் வாங்குவதற்கான கடனின் இரண்டு தவணை கட்டத் தவறிய காரணத்திற்காக அரசு போலீசை ஏவி அவர் மீது பட்டப்பகலில் பகிரங்கமாக மரணத்தாக்குதல் நடத்தப்பட்டு கொடூரச் சம்பவத்தையும் நம்மால் மறக்கவும் முடியுமோ?

சொத்து மறுகட்டுமான கம்பெனிகள் (Asset reconstruction companies) என்ற நிறுவனங்களை அரசாங்கம் துவக்கியுள்ளது. வரா கடன் கட்டுகளை (bad loan portfolios) சகாயமான விலைக்கு இந்த நிறுவனங்கள் வாங்கிவிடும். இதற்கு ஈடாக பாதுகாப்பு ரசீதுகளை வங்கிக்கு வழங்கிவிடும். இந்த பாதுகாப்பு ரசீதுகள் வங்கிகளின் கணக்குப் புத்தகத்தில் வங்கிகளின் சொத்துக்களாக (Assets) காட்டப்படும். அதாவது உண்மையில் கடன் திரும்பச் செலுத்தப்படாத நிலையில் வெறும் பிரமாணப் பத்திரத்தைக் கொண்டு திரும்பச்செலுத்தப்பட்டது போல பொய்க்கணக்கு எழுதப்பட்டு வராக்கடன்களின் தொகை குறைத்து காட்டப்படும். இவ்வாறாக, நலிவடைந்த வங்கிகளின் நிலைமை ஆரோக்கியமாக இருப்பதுபோன்றதொரு தோற்றம் ஏற்படுத்தப்படும். தொழிலதிபர்கள் ஆதாயம் அடைவதற்காக இவ்வாறு செய்யப்படுகிறது. அதாவது, இவ்வாறு தில்லு முல்லு செய்வதன் வாயிலாக ஒரு தொழிலதிபர் கட்டாத கடன் கட்டப்பட்டது போன்று சான்று ஏற்படுத்தப்பட்டு கடன் செலுத்தாதவர் பட்டியலி

தொடர்ச்சி 5ம் பக்கம்

## எஃப் ஆர் டி ஐ மசோதா 2017

# மக்களின் சேமிப்பை வங்கி மூலமாக முதலாளிகள் கொள்ளையடிப்பதற்கான ஏற்பாடு

4ம் பக்கத் தொடர்ச்சி

லிருந்து அவரது பெயர் நீக்கப்படுகிறது. அவ்வாறு அந்தத் தொழிலதிபர் மீண்டும் கடன் பெறுவதற்கு தகுதியாளராக ஆக்கப்பட்டு, அவருக்கு மீண்டும் கடன் கொடுக்கப்படுகிறது. உதாரணத்திற்கு, ஏகபோக முதலாளியும் பிரதமரின் நெருங்கிய சகாவுமான கௌதம் அதானியை எடுத்துக்கொள்வோம். அவர் வங்கிகளுக்கு செலுத்தாமல் ஏமாற்றியுள்ள தொகை ஏறக்குறைய ஒரு லட்சம் கோடி ரூபாயாகும். ஆனால், ஆஸ்திரேலியாவில் சர்ச்சைக்குரிய வகையில் சுரங்கத் தொழில் நடத்துவதற்காக பாரத ஸ்டேட் வங்கி அவருக்கு 3,000 கோடி ரூபாய் கடன் தந்திருக்கிறது. 6.3 பில்லியன் யு எஸ் டாலரிலிருந்து 11 பில்லியன் யு எஸ் டாலராக தனது சொத்தை உயர்த்திக் கொண்டதன்மூலம் மிகப் பெரும் பணக்காரர்கள் வரிசையில் அவர் முதல் 10 இடத்திற்கு உயர்ந்துவிட்டார். ஆக, இவற்றிலிருந்து தெரிவது என்ன? நேர்மையற்ற தொழிலதிபர்களும் ஏகபோகங்களும் மக்கள் பணத்தை ஏய்த்து சுருட்டிக் கொள்வதற்கு ஏற்ற ஏற்பாடுகளை அரசாங்கங்கள் நன்றாக செய்துதருகின்றன.

கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் மத்திய பாஜக அரசாங்கம் 2 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு கார்ப்பொரேட் கடன்களை தள்ளுபடி செய்திருக்கிறது. இத்தொகையானது, உணவுக்காகவும் விவசாய இடுபொருளுக்காகவும் முனகிக் கொண்டே அரசாங்கம் தரும் மானியத்தொகைக்கு நிகரானதாகும். இவ்வாறாக, மக்கள் பணத்தை கொள்ளையடிப்பது சட்டபூர்வமாக்கப்படுகிறது. ஆக, மக்கள் பணத்தை தவறாக பயன்படுத்துவதும் கையாடல் செய்வதும் பெரும் ஏகபோகங்களும் பெரும் தொழிலதிபர்களும் கார்ப்பொரேட்டுகளுமே ஆவர். இவர்கள்தான் தொடர்ந்து செல்வத்தை குவித்து தங்கள் சொத்துக்களை பெருக்குகின்றனர். நஷ்டப்பட்டு ஓட்டாண்டியாவது சாமானிய மக்களே. கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்து சிறுகச் சிறுகச் சேர்த்து வங்கிகளில் இருப்பு வைக்கப்படும் அவர்களது பணம் கடன் என்ற பெயரில் பெரும் தொழில் நிறுவனங்களும் தொழிலதிபர்களும் கையாடல் செய்வதற்கு அள்ளித்தரப்படுகிறது. இதனால் வங்கிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட அதே சமானிய மனிதனிடமிருந்து ஒட்ட ஒட்ட உறிஞ்சி வசூலிக்கப்படும் நேரடி, மறைமுக வரியிலிருந்து கொடுக்கப்படுகிறது. அவர்கள் செலுத்தும் வரிப்பணம் அவர்களுக்கான நலத்திட்டங்களுக்காக செலவழிக்கப்படுவதில்லை என்பது திண்ணம்.

### எஃப் ஆர் டி ஐ மசோதா தொடுக்கும் மரண அடி

ஆளும் முதலாளித்துவத்திற்கும் அதற்கு சேவகம் செய்யும் அரசியல் கட்சிகளுக்கும் அரசாங்கங்களுக்கும் இவ்வாறு மக்களை ஒட்ட ஒட்ட உறிஞ்சுவதுகூட போதவில்லை. மேலும் உறிஞ்சி உயிரை எடுப்பதற்காக அவர்கள் கொண்டுவரும் மசோதாதான் எஃப்ஆர்டிஐ மசோதா ஆகும். இதன் பின்னுள்ள வஞ்சகத் திட்டத்தை வாசகர்கள் புரிந்துகொள்வதற்காக, இம்மசோதாவின் முக்கிய அம்சங்களை சுருக்கமாக தருகிறோம்.

இம்மசோதாவின்படி,

1 ரெசல்யூஷன் கார்ப்பொரேஷன் என்றதொரு புதிய நிறுவனம் ஏற்படுத்தப்படும்.

2 இந்த கார்ப்பொரேஷனானது வங்கிகள், காப்பீடு நிறுவனங்கள் போன்ற நலிவுற்ற நிதி நிறுவனங்களைக் கையாள்வதையே தனது ஒரே கடமையாகக் கொண்டிருக்கும்.

3 ஆனால், அந்த நிதி நிறுவனங்களின் தினப்படி செயல்பாடுகளில் தலையிடாது.

4 பெரும்பாலும், தற்போது செயல்பட்டு வரும் டெபாசிட் காப்பீடு வடிவமைப்பை அகற்றிவிட்டு அதற்கு பதிலாக யுனைடெட் ஸ்டேட்ஸின் ஃபெடரல் டெபாசிட் காப்பீடு கார்ப்பொரேஷனைப் போன்று வடிவமைக்கப்பட்ட இந்த புதிய ரெசல்யூஷன் கார்ப்பொரேஷன் செயல்படுத்தப்படும்.

தற்போதைய டெபாசிட் காப்பீடு வடிவமைப் பின்படி, வங்கிகள் திவாலாகும் பட்சத்தில் டெபாசிட்தாரர்களுக்கு இழப்பீடாக ரூபாய் ஒரு லட்சம் வரையில் இழப்பீடு வழங்க உத்தரவாதம் அளிக்கிறது. ஒரு நிதி நிறுவனம், உதாரணத்திற்கு ஒரு வங்கி என்று எடுத்துக்கொள்வோம், "நம்பகத் தன்மை கடுமையான அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருக்கிறது" என்று வகைப்படுத்தப் படுமானால், அதாவது, புரியும்படி சொல்வதென்றால், திவாலாகப் போவதாக அறிவிக்கப் படுமானால், இந்த புதிய ரெசல்யூஷன் கார்ப்பொரேஷன் களத்தில் இறங்கி தன் பணியைத் துவக்கும். பாரம்பரியமாக கையாளப் படும் கருவிகளான லிக்விடேஷன் (Liquidation) (அவ்வங்கியின் இருப்பில் உள்ள பத்திரங்களை பணமாக மாற்றுவது, ரிசர்வ் வங்கியிடம் அவ்வங்கி வைத்துள்ள வைப்புத் தொகையை திரும்பப்பெறுவது போன்ற நடவடிக்கைகள்), வங்கிகளை பிற வங்கிகளோடு இணைத்தல் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளை ஒன்றிணைத்து ஒரே வங்கியாக்குதல், வங்கியின் சொத்துக்கள் மற்றும் கடன்களை நல்ல நிலையில் உள்ள நிறுவனத்திற்கு மாற்றுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு புதிதாக கொண்டுவரப்படுகின்ற பெய்ல்–இன் (bail-in) எனப்படும் மீட்டுவைத்தல் நடவடிக்கையையும் இந்த ரெசல்யூஷன் கார்ப்பொரேஷன் மேற்கொள்ளும். பெய்ல்–அவுட் எனப்படும் மீட்டெடுத்தல் என்பது வங்கி உள்ளிட்ட ஏதேனும் ஒரு நிதி நிறுவனம் நலிவுறும்போது அந்நிறுவனத்தை காப்பாற்ற அரசு கஜானாவிலிருந்து நிதியை தருவதாகும். ஆனால், பெய்ல்–இன் எனப்படுவது இந்த நஷ்டத்தை ஈடுசெய்ய சேமிப்புதாரர்களின் பணத்தை எடுத்துக் கொள்வதாகும். இந்த புதிய ரெசல்யூஷன் கார்ப்பொரேஷன் இதை இரண்டு வழிகளில் செய்யும். சாதாரண டெபாசிட்தாரர்களின் வங்கிக் கணக்கை முடக்கக் கூடும்; வங்கி சேமிப்புகளிலிருந்து பணத்தை திரும்பப் பெறுவதை ஒத்திப்போடக்கூடும்; தன்னிச்சையாகவும் யதேச்சாதிகார முறையிலும் வட்டி விகிதத்தை குறைத்து, வைப்புத் தொகையில் அதிகபட்சமாக எவ்வளவு தொகையை திரும்பப் பெறலாம் என உச்சவரம்பு நிர்ணயிக்கக்கூடும். இவ்வாறின்றி, இந்த புதிய ரெசல்யூஷன் கார்ப்பொரேஷனானது, டெபாசிட்டுகளையும் சேமிப்புகளையும் திவாலாகும் வங்கியின் பங்குப் பத்திரங்களாக மாற்றித் தரக்கூடும். (திவாலாகும் வங்கியின் பங்குப் பத்திர மதிப்பு பெரும்பாலும் பூச்சியமாக இருக்கும்). அல்லது டெபாசிட்டுகளையும் சேமிப்புகளையும் மூலதனச் சந்தைக் கருவிகளான பங்குகள், பத்திரங்கள் போன்றவைகளாக மாற்றித் தரக்கூடும். இவை பங்குச் சந்தையின் ஏற்ற இறக்க அபாயங்களுக்கு உட்பட்டவையாக இருக்கும். சுருங்கக் கூறின், பெய்ல்–இன் என்பது நிதி நிறுவனங்கள் திவாலாகும் போது அது எதிர்கொள்ளும் நஷ்டத்தை பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ சேமிப்புதாரர்கள் மற்றும் டெபாசிட்தாரர்களின் தலையில் கட்டுவதாகும். மொத்த டெபாசிட் தொகையில் டெபாசிட்தாரர்களுக்கு எவ்வளவு தொகை திருப்பித்தருவது என்பதையும் இந்த புதிய ரெசல்யூஷன் கார்ப்பொரேஷன் முடிவு செய்யும். டெபாசிட் காப்பீடு உச்சவரம்பாக தற்போதுள்ள ஒரு லட்சம் ரூபாய் அப்படியே இருக்குமா, அதிகரிக்கப்படுமா அல்லது குறைக்கப்படுமா என்பதை அக்கார்ப்பொரேஷனே முடிவுசெய்யும்.

வங்கிகளில் செய்யப்படும் டெபாசிட் என்பது வங்கிக்கும் (கடனாளி அல்லது பணம் பெறுபவர்) டெபாசிட் செய்பவருக்கும் (கடன்காரர் அல்லது பணம் தருபவர்) இடையே செய்துகொள்ளப்படும் ஒப்பந்தம் என்பது அனைவரும் அறிந்ததே. இந்த ஒப்பந்தம் வங்கி முறைப்படுத்தல் சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது. ஒரு வங்கி அல்லது நிதி நிறுவனத்திற்கு புத்துயிர் ஊட்டுவதற்கோ அல்லது அதை கலைத்துவிடுவதற்கோ என்னென்ன செய்யவேண்டும் என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் இந்த ரெசல்யூஷன் கார்ப்பொ ரேஷனுக்கு வழங்கப்படவிருப்பதால் டெபாசிட் தாரருக்கும் வங்கிக்கும் இடையேயான இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகாது என்றுகூட அது அறிவிக்கக்கூடும். இதன் மூலம் ஒட்டு மொத்த டெபாசிட் தொகையையும் டெபாசிட் தாரர் இழக்கக்கூடும்.

ஆகவே, வங்கி வைப்புத் தொகைகளும் சேமிப்புகளும் பாதுகாப்பாக இருக்கும் என்று இனிமேலும் நம்புவதற்கு இடமில்லை. டெபாசிட் தாரர்கள் தங்கள் சேமிப்புத் தொகையின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதுமாகவோ இழக்கப்போவது அவர்கள் செய்கின்ற தவறுகளால் அல்ல. இதில் அவர்கள் தவறு எதுவும் இல்லை. ஒரு பாவமும் அறியாத அப்பாவி டெபாசிட்தாரர்களின் வைப்புத் தொகைகள் பெரும் தொழிலதிபர்களும் கார்ப்பொரேட்டுகளும் கபளீகரம் செய்துகொள்வதற்கு அரசாங்கம் சட்டபூர்வமாக வழிவகை செய்து கொடுக்கிறது. ரெசல்யூஷன் கார்ப்பொரேஷன் என்ற பொம்மையை வெளியே காட்டிக்கொண்டு உண்மையில் அரசாங்கம் கார்ப்பொரேட்டுகளுக்கு சாதகமாக செயல்படுவதற்கு யதேச்சாதிகாரத்தை பயன்படுத்துகிறது. இதைத்தான் டெபாசிட்தாரர்களுக்கு சாதகமான "விரைவான, நன்கு திட்டமிட்டு முறைப்படியான திறம்பட" மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகள் என்று கூறிக்கொள்கிறது. வங்கித்துறையையும் டெபாசிட்தாரர்களையும் பாதுகாக்க வேண்டுமானால் கோடிக்கணக்கான கோடி ரூபாய்களை கடன் பெற்று திருப்பிச் செலுத்தாமல் ஏய்த்துவரும் தொழிலதிபர்கள் மீதும் நிறுவனங்கள் மீதும் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு திரும்பச் செலுத்தச் செய்வது, தவறும் பட்சத்தில், அவர்கள் சொத்துகளை ஜப்தி செய்வது போன்ற நடவடிக்கைகளைத்தான் முதலில் மேற்கொள்ளவேண்டும் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால், திருடனை விட்டுவிட்டு, அவனுக்கு ஆதரவாக செயல்பட்டுக்கொண்டு பணத்தை பறிகொடுத்தவனை தண்டிக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்கிறது. இது அப்பட்டமான பகற்கொள்ளை. அநீதியின் உச்சக்கட்டம். 'சப்கா சாத்; சப்கா விகாஸ்' (அனைவருடனுமான, அனைவருக்குமான வளர்ச்சி) என்று பிரதமர் முழங்கும் கோஷத்தின் உண்மையான கோர முகம் இதுவே.

இந்த எஃப்ஆர்டிஐ மசோதாவுக்கு ஆதரவாக பேசும் சிலர் ஒரு வாதத்தை முன்வைக்கிறார்கள். டெபாசிட் செய்பவர்கள் வட்டி பெறுகின்றனர். இவ்வாறாக அவர்கள் தங்கள் வைப்புத்தொகை வாயிலாக லாபமீட்டுவதால் வங்கிகள் நஷ்டமடையும்போது அந்த நஷ்டத்தை தாங்களும் தாங்கிக்கொள்வதுதானே முறை என்று அவர்கள் வாதிடுகின்றனர். என்னவொரு அராஜகத்தனம்! டெபாசிட்தாரர்களைக் கேட்டுக்கொண்டா திருட்டுத்தனத்தில் ஈடுபடுகின்ற ஏய்த்துப் பிழைக்கும் நிறுவனங்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் லட்சக்கணக்கான கோடி ரூபாய்களை கடனாகத் தந்தன? அதாவது இவர்கள் பயன்படுத்தும் டெக்னிகல் வார்த்தைகளில் சொல்வதானால் போர்ட்ஃபோலியோக்களை தேர்ந்தெடுப்பதில் டெபாசிட்தாரர்கள் பங்காற்றுகின்றனரா? எந்த அளவிற்கு ரிஸ்க் எடுக்கலாம் என்று முடிவெடுப்பதில் டெபாசிட்தாரர்களின் கருத்துகள் கேட்கப்படுகின்றனவா? அப்படியிருக்க, வங்கி நிர்வாகம் தன்னிச்சையாக எடுக்கும் முடிவுகளால் ஏற்படும் நஷ்டத்தில் டெபாசிட்தாரர் எதற்காக பங்குகொள்ளவேண்டும்? தன்னை சம்பந்தப்படுத்தாமல் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் சுமையை டெபாசிட்தாரர் ஏன் சுமக்கவேண்டும்? அடுத்தவர் செய்யும் தவறுகளுக்கான பலனை அவர் ஏன் அனுபவிக்கவேண்டும்? வங்கிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள்

தொடர்ச்சி 6ம் பக்கம்

எஃப் ஆர் டி ஐ மசோதா 2017

# மக்களின் ஒன்றுபட்ட போராட்டமே தொடர் பொருளாதாரத் தாக்குதல்களை முறியடிக்கும் ஓரே வழி

5ம் பக்கத் தொடர்ச்சி

குறித்தோ ரிஸ்க்கை குறைப்பதற்கு வங்கிகள் செயல்பாடுகள் குறித்தோ அறிந்துகொள்வதற்கான உரிமை அவருக்கு உள்ளதா? இல்லையே! அப்படியிருக்க அவர் ஏன் நஷ்டத்தை சுமக்கவேண்டும்?

இன்னொரு வகையில் நாம் வாதத்தை முன்வைப்போம். டெபாசிட் என்பது அதைச் செய்பவருக்கும் வங்கிக்கும் இடையே நடைபெறும் பணப்பரிவர்த்தனை. இந்த பரிவர்த்தனையில் வங்கி கடன் பெறுபவராகவும் டெபாசிட் செய்பவர் கடன் அளிப்பவராகவும் இருக்கிறார். கடன் பெற்றவர் வட்டியோடு திரும்பச்செலுத்த வேண்டும் என்பதுதானே முறை? ஒருவர் தனக்கு கடனை திருப்பிச் செலுத்தாததால் ஏற்பட்ட நஷ்டத்தை மற்றொருவரிடமிருந்து பெற்ற கடன் தொகையைக் கொண்டு ஈடுகட்டி அவருக்கு அந்த கடனை திருப்பித்தரமாட்டேன் என்று கூறுவது எத்தகைய அறம்? இத்தகைய செயலை சரியென்று கூறுவதற்கு முதலாளித்துவ பொருளாதாரத்தில் நியதிகளோ விதிகளோ இருக்கின்றனவா? முதலாளித்துவ கணக்குப் பராமரிப்பு விதிகளின் அடிப்படை நியதிகளை மீறுகின்ற அவற்றில் தில்லுமுல்லுகள் புரிகின்ற செயல்கள்தானே? எனவே, இவர்களின் வாதம் அனைத்தும் மக்களை ஏமாற்றி இந்த வஞ்சக சட்டத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காக இவர்கள் மேற்கொள்ளும் சூழ்ச்சியேயன்றி வேறல்ல.

இந்த மசோதாவிற்கு ஆதரவாக வாதாடும் சிலர் வேறொரு வகையில், மிக நயமாக, நல்லவிதமாக பேசி சமாதானப்படுத்தப் பார்க்கிறார்கள். இத்தகையோர் முன்வைக்கும் வாதம் யாதெனில், இவ்வளவுக்கெல்லாம் பயப்படுவதற்கு காரணமே இல்லை, வங்கிகளின் நிலைமை ஒன்றும் அப்படி மோசமாக இல்லை, நம்முடைய பணம் நமக்கு நிச்சயம் நாம் விரும்பும்போது திரும்பக்கிடைக்கும், எந்த வங்கியும் திவாலாகப் போவதில்லை, அப்படியே ஒருக்கால் நிலைமை மோசமானாலும் முன்பு செய்ததுபோல பிற வங்கிகளோடு இணைத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் நமது பணம் பாதுகாக்கப்படும் என்றெல்லாம் சால்ஜாப்பு சொல்கிறார்கள். ஆனால் இந்த வாதத்தையும் நம்பமுடியாது என்பதை யதார்த்தம் நிரூபிக்கிறது.

கபோல் கோ–ஆப்பரேடிவ் பேங்க் ஆஃப் மும்பை திவாலாகிவிட்டதாக அறிவித்துவிட்டது. இந்த வங்கியின் சேமிப்புக் கணக்கு மற்றும் நடப்புக்கணக்கு ஆகியவற்றிலிருந்து, இருப்புத் தொகை எவ்வளவு இருந்தாலும், அதிகபட்சமாக ரூபாய் 3,000க்கு மேல் எடுப்பதற்கு ரிசர்வ் வங்கி தடைசெய்துவிட்டது. இந்த வங்கி புதிதாக கடனோ முன்பணமோ வழங்க இயலாத நிலையில் இருப்பதாகவும் ரிசர்வ் வங்கி அறிவித்துவிட்டது. ஏழு பொதுத்துறை வங்கிகள் கடன் கொடுப்பதற்கு ரிசர்வ் வங்கி கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. ஓரியண்டல் பாங்க் ஆஃப் காமர்ஸ், தேனா வங்கி, சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா, ஐடிபிஐ வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, யு கோ வங்கி, மஹாராஷ்ட்ரா வங்கி ஆகியவையே அந்த வங்கிகளாகும். ரிஸ்க்கான சொத்துகளிலிருந்து ஒதுங்கிக்கொள்ளுமாறும் இதன் வாயிலாக அவற்றின் நிதி ஆரோக்கியம் மேலும் அழுத்தத்திற்கு ஆளாகாமல் இருக்கும் என்றும் ரிசர்வ் வங்கி இந்த வங்கிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. சமீபத்தில் கார்ப்பொரேஷன் வங்கியும் இந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது. தர மதிப்பீட்டு நிறுவனமான ஐசிஆர்ஏ வரிசைப்படுத்தியுள்ள பட்டியலின்படி அரசுக்கு சொந்தமான 21 வங்கிகளில் (ஸ்டேட் வங்கியும் அதன் இணைப்பு வங்கிகளும் தவிர்த்து) 16 வங்கிகளும் 16 தனியார் வங்கிகளில் 2 வங்கிகளும் பிசிஏ (Prompt corrective action - மிகச்சரியாக உடனடி சீர்செய்யும் நடவடிக்கை) கட்டமைப்பின்கீழ் வரக்கூடும் என்று குறிப்பிட்டுள்ளது. சர்வதேச தர மதிப்பீட்டு நிறுவனமான ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் (S&P)ன் பொருளாதார தொழில் ரிஸ்க் வகைப்படுத்தலின்படி இந்திய வங்கித்துறையை 'பிரிவு 5' என வகைப்படுத்தி மிக அதிகமான அந்நிய கடன் சுமையின் காரணமாக கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இத்தாலி, ஸ்பெயின், ஐயர்லாந்து போன்ற நாடுகளுக்கு இணையாக பட்டியலிட்டுள்ளது. இந்திய வங்கிகளின் நிலைமை அந்த அளவிற்கு மோசமாக உள்ளது.

## மக்கள் பணத்தை மேன்மேலும் ஊக வாணிபத்தில் திசைதிருப்பிவிடும் சூழ்ச்சி

இவற்றோடு கூடவே, மக்களின் சேமிப்புப் பணத்தை ஊக வாணிப மூலதனச் சந்தைக்கு திசைதிருப்பிவிடும் சூழ்ச்சியும் அரங்கேறி வருகிறது. எஃப்ஆர்டிஐ மசோதாவின் பெய்ல்–இன் ஷரத்துக்களைப் பார்த்தால் இந்த உண்மை புலப்படும். வங்கி வைப்புத் தொகைகளுக்கும் தேசிய சேமிப்பு பத்திரங்களுக்கும் தரப்படும் வட்டி விகிதம் தொடர்ந்து குறைக்கப்பட்டுக்கொண்டே வருவதால் அதிக பணப்பலன்களைப் பெறவேண்டும் என்ற ஆவலில் பங்குகள், பத்திரங்கள், போன்ற மூலதனச் சந்தை கருவிகளிலோ அல்லது பரஸ்பர நிதியத்திலோ முதலீடு செய்வதற்கு ஆசை காட்டி மக்கள் தூண்டப்படுகிறார்கள். ஏன் இந்த ஊக வாணிபத்தை நோக்கிய ஆசை வளர்க்கப்படுகிறது. ஏனெனில், தீர்க்கவியலா சந்தை நெருக்கடியில் சிக்கி மேன்மேலும் அதிக சுணக்கத்தை சந்தித்துவரும் ஆளும் முதலாளித்துவ வர்க்கம் உற்பத்தித்துறையில் முதலீடு செய்வதை விடுத்து மூலதனச் சந்தை உள்ளிட்ட இதர துறைகளுக்கு மூலதனத்தை திருப்பிவிடுகிறது. மக்களுடைய சேமிப்புப் பணமும் மூலதனச் சந்தையில் முதலீடு செய்யப்படுமானால் ஊக வாணிபத்தில் ஈடுபடுவதற்கு அதிக நிதி கிடைக்கும். மூலதனச் சந்தையில் ஊக வாணிபத்திற்காக பட்டியலிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையிலான பங்குகளையும் பத்திரங்கள் உள்ளிட்ட கடன் கருவிகளையும் நோக்கி முதலீடு செய்வதற்காக ஏராளமான பணம் செல்வதால் பங்குகள் மற்றும் பத்திரங்களின் மதிப்பும் விலையும் எக்கச்சக்கமாக அதிகரிக்கும். இதை எளிதாக புரிந்துகொள்வதற்கு ஒரு உதாரணம் தருகிறோம். முன்பு 30 பங்குகளை நோக்கி ரூ3,000 சென்றுகொண்டிருந்ததென்று வைத்துக்கொள்வோம். தற்போது, மூலதனச் சந்தையில் அதிக அளவு பணம் முதலீடு செய்யப்படுவதால் இதே 30 பங்குகளை ரூ30,000 பின்தொடரும். இதன் காரணமாக, முன்பு ரூ10க்கு விற்கப்பட்ட பங்குகளின் மதிப்பு தற்போது ரூ100ஆக அதிகரிக்கும். செயற்கையாக ஊதிப் பெருக்கப்பட்ட மூலதனச் சந்தையை கைகாட்டி "பொருளாதாரம் வளர்ச்சி அடைகிறது", "அதிகரிக்கும் சந்தை உணர்வுகள்" என்றெல்லாம் மாயத்தோற்றம் ஏற்படுத்தப்படும். இந்த மாயத்தோற்றத்தைக் காட்டி மேலும் அதிக பணத்தை மூலதனச் சந்தையில் முதலீடு செய்யவைப்பர். இவ்வாறு ஏராளமான பணம் குவிகையில், பின்னாலிருந்து கயிற்றை இழுத்து தங்களுக்கு சாதகமாக ஆட்டம் நடத்தும் சூதாடிகள் தக்க சமயத்தில் தங்கள் முதலீட்டை திரும்பப் பெற்று வானளாவ லாபம் ஈட்டுவர். மூலதனச் சந்தையில் பங்குகளின் மதிப்பு "திடீரென" வீழும்போது சாதாரண மக்கள் வாயில் வயிற்றில் அடித்துக்கொண்டு தங்கள் பணம் அனைத்தையும் சில நிமிடங்களில் இழந்து ஓட்டாண்டிகளாகி விடுவர். கிலிபிடித்து தற்கொலைகள் கூட செய்துகொள்வர். ஆனால், இந்த சூதாட்டத்தில் வல்ல சகுனிகளோ கொள்ளை லாபம் ஈட்டியிருப்பர்.

எனவே, ஒடுக்கப்பட்டுள்ள சாமானிய மக்களுக்கு இது இருமுனைக் கத்தியாகும். எப்படி வீசினாலும் குத்து அவர்களுக்குத்தான். தொடர்ந்து அதிகரித்து வரும் விலைவாசியாலும் குறைந்துவரும் வருவாயாலும் அவர்கள் மேன்மேலும் தாங்கொணா சுமைக்கு ஆளாகி வருகின்றனர். மறுபுறத்தில், வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி சிறுகச்சிறுகச் சேர்த்த சேமிப்பையும் இழப்பதற்கு தயாராகுங்கள் என்று அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு அவர்களது வங்கிச் சேமிப்புகளை மூலதனப் பணச்சந்தையில் முதலீடு செய்வதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். சீரழிந்து நாற்றமெடுத்துக் கொண்டிருக்கும் மரணப் படுக்கையில் உள்ள முதலாளித்துவத்தின் உண்மையான கோர முகம் இதுவே.

பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கம் கொண்டுவரும் ஒவ்வொரு கொள்கையும் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் முதலாளித்துவ வர்க்க நலனுக்கு அப்பட்டமாக அடிபணிந்து செய்யும் சேவையாகவே உள்ளது. சாமானிய மக்கள் எப்போதுமே பாதிப்பிற்குள்ளாகும் நிலையிலேயே இருக்கின்றனர். அவர்களின் துன்ப துயரங்களைப் பற்றி சற்றும் கவலைப்படாத அரசாங்கம் திரும்பத்திரும்ப பொருளாதார ரீதியாக ஒடுக்குவதற்கும் நிதிச்சுமைகளால் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் தொடுப்பதற்கும் தயங்குவதில்லை. இவ்வாறு செய்வதற்காகத்தானே அதன் எஜமானர்களான ஆளும் முதலாளித்துவ வர்க்கம் பாஜகவை ஆட்சியில் அமர்த்தியது. தங்கள் எஜமான விசுவாசத்தை அவர்கள் நன்றாகவே காட்டி வருகின்றனர்.

## எப்பாடுபட்டேனும் எஃப்ஆர்டிஐ மசோதாவை முறியடிக்கவேண்டும்

நமது வாழ்வின் மீதும் வாழ்வாதாரத்தின் மீதும் தொடுக்கப்படும் பொருளாதார மரண அடிகளை இனிமேலும் பொறுப்பதற்கில்லை. குனியக்குனியக் குட்டிக்கொண்டுதான் இருப்பார்கள். இந்த தாக்குதல்களை நாம் முறியடித்தாகவேண்டும். அரசாங்கம் ஒன்றன்பின் ஒன்றாக தொடுத்துவரும் பொருளாதார தாக்குதல்களை நியாயப்படுத்துவதற்கு முன்வைக்கும் வாதங்களை மக்கள் ஏற்றுக்கொள்ளாமல் கேள்விக்கு உட்படுத்துவதைக் காண்கையில் மனம் உற்சாகமடைகிறது. மக்களின் கோபத்தை உணர்ந்த அரசாங்கம் நடப்பு குளிர்கால கூட்டத்தொடரில் தாக்கல் செய்வதாக இருந்த எஃப்ஆர்டிஐ மசோதாவை தள்ளிவைத்திருக்கிறது. ஆனால், ஆளும் வர்க்கத்தின் சூழ்ச்சிக்கு அளவோ முடிவோ கிடையாது. நேரம் பார்த்து இந்த மசோதாவை நிறைவேற்றிவிட அனைத்து முயற்சிகளையும் அது மேற்கொள்ளும்.

எனவே, மக்கள் காட்டும் எதிர்ப்பில் எந்த தொய்வும் ஏற்பட்டுவிடக்கூடாது. இந்த எதிர்ப்பானது நன்கு அணிதிரட்டப்பட்ட நீடித்து நிலைக்கின்ற நாடுதழுவிய இயக்கமாக உருப்பெற வேண்டும். இந்த மசோதாவை அரசாங்கம் திரும்பப்பெறுகின்ற வரையில் ஓயாமல் போராடுகின்ற பலமான இயக்கமாக இது வளர வேண்டும். முதலாளித்துவ எதிர்க்கட்சிகள் இந்த இயக்கத்தை நடத்தும் என எதிர்பார்க்க முடியாது. துரதிருஷ்டவசமாக தங்களை மார்க்சிஸ்டுகள் என்றும் இடதுசாரிகள் என்றும் அழைத்துக் கொள்கின்ற கட்சிகளும் முதலாளித்துவ ஊடகங்களின் ஆதரவைப்பெற்றுக் கொண்டிருப்பதால் அவர்களும் முழுமூச்சாக இந்த விஷயத்தில் முன்முயற்சி எடுப்பதற்கு தயங்குகின்றனர். முதலாளித்துவ வாக்கு அரசியலின் வரம்பிற்குட்பட்டு தேர்தல் ஆதாயத்தைக் கருதி மட்டுமே அவர்கள் எதிர்ப்பைக் காட்டுகின்றனர். ஆனால், இந்த எஃப்ஆர்டிஐ மசோதா ஒரு கொலைவெறி பொருளாதாரத் தாக்குதல் என்பதை உணர்ந்து தங்கள் சக்தியனைத்தையும் திரட்டி இதை முறியடிக்கும் வரை தொடர்ந்து போராட வேண்டும் என்பதை சுரண்டப்படும் மக்கள் உய்த்துணரவேண்டும் ■

## ஜெருசலேமை மையமாக வைத்து டிரம்பின் சூழ்ச்சி

# சர்வதேச நியதிகளையும் ஒருமித்த கருத்தையும் மீறி, பாலஸ்தீனத்தின் மீதான அப்பட்டமான தாக்குதல்

டிசம்பர் 6, 2017 அன்று, திமிர் பிடித்தவர் என அறியப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப், அமெரிக்க தூதரகத்தை டெல் அவிவ்–விலிருந்து ஜெருசலேமிற்கு மாற்றப்போவதாக ஒரு புதிய அறிவிப்பைத் தந்து உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கினார். மீண்டும் மீண்டும் போடப்பட்ட சர்வதேச ஒப்பந்தத்தின்படி, தற்சமயம் கிழக்கு ஜெருசலேம் மீதான இஸ்ரேலின் இறையாண்மை சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்படாத நிலையில், இனிமேல் ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகராக இருக்கும் என்பதும், ஒட்டுமொத்த ஜெருசலேமும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் என்பதும் இதன் பொருளாகும். ஜெருசலேம் உண்மையில் பாலஸ்தீனத்தைச் சேர்ந்ததாகும். தனது அறிவிப்பானது, "இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையேயான சச்சரவைத் தீர்ப்பதற்கான ஒரு புதிய அணுகுமுறை"யின் அடையாளமென டிரம்ப் எக்காளமாகக் கூறுகின்றார். (AFP - Livemint 07.12.2017)

### டிரம்பின் இம்முடிவு புதிய சர்ச்சையைக் கிளரிவிட்டிருக்கிறது

எந்த அளவிற்கு அது 'ஒரு புதிய அணுகுமுறையை' அடையாளப்படுத்தப்போகின்றது என்பது நிச்சயம் வெளிவரத்தான்போகின்றது. ஆனால், அதிகாரவெறி பிடித்த அமெரிக்க ஏகாதிபத்திய கொள்ளைக்கூட்டத் தலைவனின் வெறுப்பை உமிழ்கின்ற அகந்தையான இந்த முன்னறிவிப்பு, உலகளாவிய கண்டனத்திற்கு உள்ளானதுடன், ராஜாங்க உறவுகளில் மோசமான விளைவையும், கூடவே இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்குமிடையே புதிய 'சர்ச்சையை'யும் ஏற்படுத்தியிருக்கிறது. இதனையெதிர்த்து பாலஸ்தீனியர்கள் தெருக்களில் போராடிக்கொண்டிருக்கின்றனர். வெஸ்ட் பேங்க் மற்றும் காஸா ஸ்டிரிப் பகுதிகளில் பதட்டம், வெறுப்பு, கோபம் காரணமாக பாலஸ்தீனியர்கள் தெருக்களில் போராடிக்கொண்டும் மோதிக்கொண்டும் இருக்கின்றனர். "கிழக்கிற்கும் முன்பே மேற்கில் நரகத்தின் கதவுகள் திறந்திவிடப்படும்" என்ற கூக்குரல்கள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

யூதவெறி இஸ்ரேல், வழக்கம்போலவே டிரம்பின் இந்த அறிவிப்பினால் உற்சாகமடைந்து, கண்ணீர்ப் புகை, ரப்பர் புல்லட்டுகள் மற்றும் உண்மையான குண்டுகளைக்கொண்டு தாக்கியும், அத்துடன் வான்வெளி மூலமாக பாலஸ்தீனத்தை மீண்டும் தாக்கியும், டிசம்பர், 6முதல் 9வரை, வெறும் நான்கே நாட்களில் எண்ணற்ற உயிர்களைப் பலிவாங்கியும், 1,100க்கும் மேற்பட்ட மக்களை காயப்படுத்தியும் இருக்கிறது. பாலஸ்தீன சுகாதார அதிகாரிகளால் இது அறிவிக்கப்பட்டிருக்கிறது. டிசம்பர் 7ஆம் தேதியன்று 20க்கும் மேற்பட்ட இஸ்ரேலியப் படைவீரர்கள் ஹெப்ரான்–ல் பாவ்ஜி–அல்–ஜூனைடி என்கின்ற 14 வயது பையனைக் கைது செய்ததுடன், காவலில் வைத்திட அவனது கண்களைக்கட்டி அழைத்துச்சென்றிருக்கின்றனர். சமூக ஊடகங்களில் இத்தகைய மனிதாபிமானமற்ற செயல் பரவியதுடன், "இஸ்ரேல் ஒரு பயங்கரவாத அரசு, குழந்தையைக் கொலை செய்யும் அரசிடம் ஜெருசலேமை விட்டுக்கொடுக்க மாட்டோம்" என்ற பரவலான கருத்து உள்ளிட்ட மோசமான கண்டனத்தையும் பெற்றது.

பாலஸ்தீன எல்லைகளான, ஜோர்டான், துருக்கி, பாகிஸ்தான், இந்தியா, வங்கதேசம், ஈரான், மலேசியா, லெபனான், இந்தோனேசியா, எகிப்து, மொராக்கோ மற்றும் உலகின் இன்னும் பல இடங்களில் ஆயிரக்கணக்கில், பத்தாயிரக்கணக்கில் மக்கள் திரளினர் இதனை எதிர்த்துப் போராடினர். லண்டன், பிரஸ்ஸெல்ஸ், பாரிஸ், ரோம், ஆம்ஸ்டர்டாம், பெர்லின் போன்ற மேற்கு ஐரோப்பிய நகரங்களில், கனடாவில் மற்றும் அமெரிக்காவின் அனைத்து நகரங்களிலும் பாலஸ்தீன ஆதரவுப் போராட்டங்கள் நடைபெற்றன.

### தெருக்களில் நடந்த போராட்டங்கள் முதல் ராஜாங்க உறவுகள் வரை கண்டனங்கள் எழுந்தன

தெருக்களில் நடந்த போராட்டங்கள் முதல் ராஜாங்க உறவுகள் வரை கண்டனங்கள் எழுந்தன. ஆக, உலக ஏகாதிபத்திய நாடுகள் மற்றும் பல அரேபிய நாடுகளின் பிற்போக்குவாத ஆட்சியாளர்களும்கூட வேறு வழியின்றி பகிரங்கமாகக் கண்டனம் தெரிவிக்கும் அளவிற்கு அமெரிக்காவின் நடவடிக்கை என்பது சர்வதேச நியதிகளையும் ஒருமித்த கருத்தையும் (consenses) அப்பட்டமாக மீறிய, நியாயமற்ற, கொடிய செயலாகும். அமெரிக்காவின் இத்தகைய அறிவிப்பை நிலையற்ற தன்மையை நோக்கிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய 'சர்வதேச சட்டத்தை மீறிய ஒன்று' எனவும் 'ஆத்திரமூட்டும் ஒரு செயல்' எனவும், 'ஆகச்சிறந்த முஸ்லீம் மற்றும் கிருஸ்தவ புனித ஸ்தலங்கள் . . . மீது அறிவிக்கப்பட்ட ஒரு போர்' எனவும் கடுமையான வார்த்தைகளில் தங்களின் கருத்தை வெளியிட்டவர்களில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்புக்கள் (OIC-Organisation of Islamic Co-operation), ஹமாஸ் தலைவர்கள், ஹிஸ்புல்லாவின் தலைவர்கள், லெபனான் போராளிக்குழு மற்றும் அரேபிய லீக்கின் வெளியுறவு அமைச்சர்களும் அடங்குவர். டிரம்ப்பின் அறிவிப்பு வந்த ஒரு வாரத்திற்குப் பின்னர், துருக்கியில் நடந்த அவர்களின் உச்சி மாநாட்டில், பாலஸ்தீனத்தின் மீதான "இஸ்ரேல் ஆக்கிரமிப்பை" முடிவிற்குக் கொண்டு வரவேண்டும் என்றும், "இரண்டு அரசுகள் எனும் தீர்வு அடிப்படையில் நியாயமான, முழுமையான அமைதி"யை உத்திரவாதப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் தலைவர்கள் முன்வைத்தனர். அவர்கள் பாலஸ்தீன அரசையும் அதன் தலைநகராக ஜெருசலேமையும் அங்கீகரித்திட உறுதி பூண்டனர். பொதுவான எதிர்வினை என்பது, அமெரிக்காவின் 'அமைதி நடவடிக்கை' போலியானது என்பதை டிரம்ப்பின் இந்த அறிவிப்பே அம்பலப்படுத்தி விட்டது என்பதாகவே இருந்தது.

குறிப்பிடும் வகையில், நேட்டோ அமைப்பின் போர்வெறி பிடித்த கொள்ளைக் கும்பலில் மற்றும் மத்தியக்கிழக்கு நாடுகளில் ஈவிரக்கமற்ற சுரண்டலிலும் போரிலும் ஈடுபட்டு, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நம்பிக்கைக்குரிய பங்காளிகளாக இதுவரையில் செயல்பட்டுவந்த அமெரிக்காவின் கூட்டுநாடுகள்கூட அமெரிக்காவிற்கு எதிரான நிலைபாட்டை எடுக்க வேண்டியிருந்ததால், அது உலக அரசியலில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை தனிமைப்படுத்தியது. இவ்வாறாக, டிரம்பின் முடிவை விமர்சித்தும் அவரது அறிவிப்பின் பின்னால் இருக்கும் ஞானம் குறித்து கேள்வியெழுப்பியவைகளில் அமெரிக்காவின் ஐரோப்பிய கூட்டு நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம் போன்றவைகளும், அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் செய்தித் தொடர்பாளரும் மத்தியக் கிழக்கு நாடுகளான யுனைட்டெட் அரேப் எமிரேட்ஸ் மற்றும் சவுதி அரேபியாவும் அடங்கும். ஸ்வீடன் நாட்டின் வெளியுறவு அமைச்சர் மார்கோ வால்ஸ்ட்ராம் என்பவர் டிரம்பின் இந்த அறிவிப்பை 'பேரழிவு மிக்கது' என அழைத்துள்ளார். பெரும்பாலான நேட்டோ உறுப்பு நாடுகளுடன் ரஷ்ய வெளியுறவுப் பார்வை ஒத்துப்போன சிலவற்றுள் இதுவும் ஒன்று.

### பெரும்பான்மையான நாடுகள் அமெரிக்க ஆட்சியாளர்களின் அச்சுறுத்தல்களையும் மீறி, ஐநா பாதுகாப்புக் கவுன்சிலிலும் ஐநா பொதுச்சபையிலும் அமெரிக்காவின் நடவடிக்கையை நிராகரித்துள்ளன

விஷயம் இதுமட்டுமல்ல. உலகை பேரழிவிற்குள்ளாக்கும் பதாகை ஒப்படைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவனான திருவாளர் டொனால்டு டிரம்ப், உலக அரசியல் மேடைகளிலும்கூட தனிமைப்பட்டுப்போயிருக்கிறார். அவசர அவசரமாகக் கூட்டப்பட்ட ஐநா பாதுகாப்புக் கவுன்சிலின் (UNSC -United Nations Security Council) அவசரக் கூட்டத்தில், எகிப்து நாடு கொண்டுவந்த ஓர் வரைவுத் தீர்மானத்தை ஏனைய 14 நாடுகள் எதிர்த்துள்ள நிலையில், அமெரிக்கா தனிமைப்பட்டிருந்ததால் அது தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டியிருந்தது. "புனித நகரமான ஜெருசலேமின் குணாம்சத்தையும் அந்தஸ்தையும், மக்கட்தொகை தொகுப்பையும் மாற்றிவிட்டதாகக் கருதப்படும் எந்த முடிவுகளும் செயல்பாடுகளும், சட்ட ரீதியில் எந்தவித விளைவையும் கொண்டிருக்காது என்றும், அவை செல்லுபடியாகாதவை என்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக்கவுன்சிலின் இது தொடர்பான தீர்மானங்களின்படி அவைகள் திரும்பப்பெறப்பட வேண்டும்" என்றும், அத்துடன் "ஜெருசலேமின் அந்தஸ்து பற்றிய சமீபத்திய தீர்மானங்கள்" குறித்து வருத்தம் தெரிவிக்க வேண்டும் எனவும் அத்தீர்மானம் உறுதிபடக் கூறியது. இருந்தபோதிலும் அந்தத் தீர்மானம் டிரம்பின் பெயரை அல்லது அமெரிக்காவின் பெயரைக் குறிப்பிடவில்லை.

ஐநா பாதுகாப்புக் கவுன்சில் அத்தீர்மானத்தை நிறைவேற்றத்தவறிய நிலைமையில், ஐநா பொதுச்சபையைக் (UNGA-United Nations General Assembly) கூட்டுவதற்கான ஓர் அவசர அமர்வை ஏற்பாடு செய்ய முயற்சியெடுக்கப்பட்டது. டிசம்பர் 26ல் கூடிய ஐநா பொதுச்சபையின் அந்த அமர்வும்கூட டொனால்டு டிரம்ப் மீதும், அமெரிக்கா மீதும் கடும் கண்டனத்தைத் தெரிவித்தது, ஜெருசலேம் குறித்த டிரம்ப்பின் தன்னிச்சையான முடிவை நிராகரித்தும் அதற்குப்பதிலாக ஜெருசலேம் ஒரு சிறப்பு மிக்க அந்தஸ்தைக்கொண்ட சர்வதேச நகரம் என்ற நீண்ட காலமாக இருக்கும் ஒருமித்த கருத்தை ஆதரித்தும் மிகப்பெரும் பெரும்பான்மையில் வாக்களித்தது. (35 நாடுகள் வாக்களிக்காமலும் 21 நாடுகள் கலந்துகொள்ளாமலும் இருந்த நிலையில் 9 நாடுகள் எதிர்த்து வாக்களித்தபோது அதற்கு ஆதரவாக 128 நாடுகள் வாக்களித்தன) ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹேலே என்பவர் சர்வதேச அடியாளின் கொடிய முகத்தைக் வெளியே காண்பித்து, 193 உறுப்பு நாடுகளில் 180 நாடுகளுக்கு அவர் எழுதியதில், பொதுச்சபையில் அமெரிக்காவிற்கு எதிரான தீர்மானத்தில் வாக்களித்த நாடுகளின் "பெயரை குறித்துக்கொள்ளப்போவதாக"க்கூறியுள்ளார். டிரம்பும்கூட, எகிப்து, ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற மேற்காசிய நாடுகளுக்கான "கோடிக் கணக்கான" டாலர்கள் மதிப்பிலான அமெரிக்க நிதியுதவியை தான் நிறுத்திவைக்கப்போவதாக அச்சுறுத்தியிருந்தார். ஆனால், அத்தகைய அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் அலட்சியம் செய்து, அமெரிக்கவிற்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவாக இந்நாடுகள் வாக்களித்திருக்கின்றன.

கடந்த காலத்தில், இஸ்ரேல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் அதிகபட்சம் வாக்களிக்காமல் இருந்த, ஐநா பொதுச்சபையிலிருக்கும் அதே இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி நாடுகள் உள்ளிட்ட 28 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் 22 நாடுகள் வேறு வழியில்லாமல் அமெரிக்காவிற்கு எதிரான தீர்மானத்திற்கு வாக்களித்ததால்,

தொடர்ச்சி 8ம் பக்கம்

### புதுச்சேரியில்

## ஜனவரி 23: நேதாஜி

### புகைப்பட கண்காட்சியும் திரைப்படமும் ஏஐடிஓய்ஓவால் காண்பிக்கப்பட்டது






## ஜெருசலேமை மையமாக வைத்து டிரம்பின் சூழ்ச்சி

# ஜெருசலேம் விவகாரத்தில் யு எஸ் ஏகாதிபத்தியம் தனிமைப்பட்டு நிற்கின்றது

7ம் பக்கத் தொடர்ச்சி

அமெரிக்காவின் நிலைமை அத்தகைய பரிதாபத்திற்குரியதாக ஆகிவிட்டது. எதிர்த்து வாக்களித்த 9 நாடுகள், அமெரிக்கா, அதன் வழிப்பறிக் கொள்ளைக்கு உடந்தையாயிருக்கும் இஸ்ரேல், அதன் ஏவலுக்குக் கட்டுப்பட்ட சிறிய நாடுகளான டொகோ, மைக்ரோனீசியா, நவ்ரு, பலாவ், மார்ஷல் தீவுகள், கௌதமால, ஹோண்டுராஸ் போன்றவைகளாகும். நிதியுதவியை நிறுத்திடுவோம் என்ற டிரம்பின் எச்சரிக்கை, இஸ்ரேலின் தீவிர அமெரிக்க ஆதரவு நடவடிக்கை வாக்களிப்பைத் தவிர்த்த மற்றும் கலந்து கொள்ளாத நாடுகள் மீது சில விளைவுகளை ஏற்படுத்தியிருக்கலாம். ஆயினும், குறிப்பிடத்தக்க வகையில், பல முந்தைய சந்தர்ப்பங்களில் நடந்ததற்கு மாறாக, ஐநா சபை (UN) அமெரிக்காவின் ஆணைகளுக்குக் கட்டுப்படாமல் அதற்கெதிராகச் செயல்பட்டதன் காரணம், உலக அரசியலின் போக்கை தீர்மானிப்பதில் வெளிப்படையான பங்கம் ஏதும் ஏற்படாமல் பார்த்துக் கொண்ட சின்னஞ்சிறிய நாடுகளின் முயற்சிகளினால் தானாகும்.

“இது போன்ற அழுத்தத்திற்கு எந்த கௌரவமான அரசும் அடிபணியாது” ‘நான் பலம் கொண்டிருக்கின்றேன், ஆதலால் நான் சொல்வதெல்லாம் சரி என்ற கருத்து’ மாறியிருக்கிறது. உலகம் இன்று அநீதிகளுக்கு எதிராக கிளர்த்தெழுந்திருக்கின்றது, தார்மீக ரீதியில், சட்டரீதியில் பிறரை ஏற்கவைக்கும் வாதம் இல்லாதிருக்கையில்தான் அரசுகள் அத்தகைய அப்பட்டமாக அடக்கியாளும் முறையைத் தேர்வு செய்கின்றன” என்ற அறிவிப்புகளையும்கூட உள்ளடக்கிய சூழல் காணப்பட்டது. இது உண்மைதான், பெரிய சக்திகள் எனப்படும் அமெரிக்காவின் பாரம்பரிய கூட்டு நாடுகள்கூட, நிலவுகின்ற உலக கருத்துக்களுக்கு எதிராகத் தனிமைப்பட்டுப் போவோமோ என்ற அச்சத்தில், அமெரிக்காவிற்கு செவிசாய்க்காமல் அதற்கு எதிராக ஒருவேளை வாக்களித்திருக்கலாம். இருந்தபோதிலும், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து நியதிகளையும் முடிவுகளையும் வேண்டுமென்றே மீறியதனால், அமெரிக்காவானது பலவந்தமாக ஓரங்கட்டப்பட்டது. அமெரிக்காவின் திமிர் பிடித்த எடுபிடியான யூதவெறி இஸ்ரேல், ஐக்கிய நாடுகளுடான தனது உறவை முறித்துக்கொள்ளும் எண்ணத்தை விரக்தியுடன் வெளிப்படுத்தியது. (கார்டியன் பத்திரிகை–21.12.2017) பாலஸ்தீனம், இஸ்ரேல் சம்மந்தப்பட்ட ஜெருசலேம் பிரச்சினையின் வரலாற்றுப் பின்னணியின் சுருக்கமான விபரம் அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய இவ்விரண்டு நாடுகளின் திமிர்த்தனத்தை அடாவடித்தனத்தை மேலும் நன்கு உணர்த்தும்.

### பாலஸ்தீனத்தின் எதிர்காலத்தைப் பலிகொடுத்து போர்வெறி இஸ்ரேலை ஏகாதிபத்தியம் உருவாக்கியது

இஸ்ரேல் எனும் நாடு ஒன்று உருவாவதற்கு முன்னரே, பெரும்பாலும் துருக்கி ஓட்டொமன் பேரரசின் பகுதியாக, பல நூற்றாண்டுகளாக அரேபியர்களின் அழகிய வாசஸ்தலமாக பாலஸ்தீனம் என்பது ஏற்கனவே அங்கிருந்தது. ஆனால், அதன் பூர்வீக யூத இன மக்கள் மேன்மையான ஒரு வாழ்க்கையைத்தேடிய போக்கில், உலகம் முழுவதிலும் பரவியிருந்தனர். மேலும் இஸ்ரேல் உருவாவதற்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன்பு, ஐரோப்பிய யூத இனத்தவரிடையே பாலஸ்தீனத்தில் ஒரு யூத அரசை நிறுவுவதற்கான யூதவெறி அரசியல் இயக்கம் வளர்ந்தது. பலமிக்க, ஆக்கிரமிப்புத்தன்மையும், சமய ஈடுபாடும், இன உணர்வும்கூட கொண்டிருந்த, பெரும்பாலும் வசதி படைத்தவர்களாகவும், தோட்ட உரிமையாளர்களாகவும், வட்டிக்கு விடுபவர்களாகவும் இருந்த யூத குடியேறிகள், பாலஸ்தீனத்திற்குப் புலம்பெயர்ந்து அங்கு குடியேறிவிட்டனர். அங்கு அரேபியர்களிடம் நிலம் வாங்குவது தடைசெய்யப்பட்டிருந்ததால், தங்களால் உருவாக்கப்பட்ட தனியார் ராணுவத்தைக்கொண்டு, அதாவது உண்மையில் ரகசிய பயங்கரவாதக் குழுக்கள் உதவியுடன், பூர்வீக அரேபியர்களிடமிருந்து பலவந்தமாக நிலத்தை அபகரித்தனர். அரேபிய கிராமவாசிகளும் அவ்வாறு குடியேறியவர்களுக்கு மலிவான உழைப்பை வழங்கினர். யூதவெறிவாதம் மேலும் மூர்க்கத்தன்மை கொண்டதாக ஆனதால், அரேபியர்கள் தங்கள் நிலத்தையும் வீடுவாசலையும் இழக்கத் தொடங்கினர்.

சூட்சமம் தெரிந்த யூத குடியேறிகள் நிலத்தை மட்டும் ஆக்கிரமிக்கவில்லை. அவர்கள் அனைத்தையும் அழித்தொழித்தனர். அரேபிய கிராமங்கள் வரலாற்றிலிருந்து முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டது என்ற கூறுமளவிற்கு, எல்லாவற்றையும், ஏன் கட்டிடத்தின் ஒரு துகள் கல்லையும், அரேபியர்களுக்குச் சொந்தமான கல்லறையையும் கூட அழித்தொழித்தனர். அதன்மூலம் அவ்வாறு குடியேறிவர்கள், அங்கு வருபவர்களிடம், ஒன்றுமில்லாத பாலைவனமாக, வறண்ட பூமியாக, பரந்து விரிந்திருந்த நிலத்தைக்கொண்டு அவர்களின் கிராமங்களை தாங்கள்தான் உருவாக்கியதாகப் பெருமை பேசினர். பழங்குடி, இன வேறுபாடு மற்றும் பிறவற்றின் அடிப்படையில் பிளவுபட்டு தங்களுக்குள் ஒற்றுமை இல்லாமலிருந்த அரேபியர்கள் நிராதரவற்று ஆயிரக்கணக்கில் வெளியேற்றப்பட்டனர். காலனிய ஆதிக்க ஏகாதிபத்திய சக்திகள் யூதக் குடியேறிகளின் திட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, பாலஸ்தீனத்தை ‘தேசமற்ற’ ஒரு நாடாகப் பார்க்கத்துவங்கியதுடன், யூதக் குடியேறிகளின் காலனிய ஊடுருவலை ஊக்குவித்தனர். முதல் உலகப் போருக்குப் பின்பு, பாலஸ்தீனம் பிரிட்டிஷ்காரர்கள் ஆட்சியின் கீழ் வந்தது. 1917இல் பிரிட்டிஷ் காலனி அரசாங்கம், யூதர்களின் திட்டத்திற்கு ஒப்புதல் தந்து, பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கான ‘தேசிய குடியிருப்பை’ ஆதரிக்கும் பால்ஃபோ பிரகடனத்தைக் கொண்டு வந்தது. ஜெருசலேம் மீதான டிரம்ப்பின் தற்போதைய நடவடிக்கை, பால்ஃபோ பிரகடனத்தின் நூற்றாண்டு வருடத்தில் தற்செயலாக இணைந்திருக்கின்றது!

இருந்தபோதிலும், 1948 வரை பாலஸ்தீனமானது ஜோர்டான் மன்னரின் நிலப்பிரபுத்துவ ஆட்சியுடன் கூடிய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சுரண்டலின்கீழ் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் இருந்துவந்தது. ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அப்பிராந்தியத்தினுள் ஊடுருவிக்கொண்டிருந்ததால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் யூதவாதிகளுக்கிடையேயான உறவு ஏற்கனவே இணக்கமற்றுப் போயிருந்தது. இர்குன் போன்ற இன்னும்பிற யூதவாத பயங்கரவாதக் குழுக்கள் அதற்கெதிராகச் செயல்பட்டதுடன், பிரிட்டிஷையும்கூடத் தாக்கி அரேபியர்கள் மீதான பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடுத்தன. 1946இல் அதன் நேரடி நடவடிக்கையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமேன் 1,00,000 இடம்பெயர்ந்த யூதர்களை பாலஸ்தீனத்தினுள் அனுமதிக்கும் பரிந்துரைக்கு ஒப்புதலளித்தார். அந்த ஆண்டு அக்டோபரில், ஒரு யூத அரசை உருவாக்குவதற்கான ஆதரவை அவர் வெளிப்படையாகவே அறிவித்தார். ஒரு யூத அரசை உருவாக்கும் இந்த ஏகாதிபத்திய திட்டத்திற்கு ஒப்புதல் தரும் அடையாளமாக, 1947ஆம் ஆண்டு நவம்பர் 29 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, திட்டமிடப்பட்டபடி பிரிட்டிஷ் காலனியாதிக்க ஆட்சி முடிவடையும் 1948ஆம் ஆண்டு மே மாதம், பாலஸ்தீனத்தை யூத அரசென்றும், அரேபிய அரசென்றும் பிரித்திடும் தீர்மானம் 181 ஐ நிறைவேற்றியது.

ஜெருசலேம் நகரமானது ஒரு தனியான ‘சர்வதேச நகரம்’ என அங்கீகரிக்கப்பட்டதால், யூதவாதம், கிருஸ்துவம், இஸ்லாம் ஆகிய முக்கிய ‘ஆபிரஹாமிய மதங்களுக்கு’ விலைமதிப்பற்றதாக விளங்கக்கூடிய ஜெருசலேமைச் சுற்றிய சமய முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் யாவும் ஒரு “பிரத்தியேக சர்வதேச ஆட்சி”யினால் ஆளப்பட வேண்டுமென ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆக, இஸ்ரேல் உருவாவதற்கு முன்னரே ஏகாதிபத்தியவாதிகள் பாலஸ்தீனத்தைப் பிரித்துவிட்டனர்!

ஐநா தீர்மானத்தின்படி, இஸ்ரேல் ஓர் சுதந்திர யூத அரசாக 1948, மே மாதம் 14 அன்று அறிவிக்கப்பட்டது. அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் ஏற்கனவே தீர்மானம் 181 ஐ ஆதரித்திருந்தனர். இப்போது அவர்கள் 1948, மே 14 அன்று இஸ்ரேலை அங்கீகரித்தாலும், அரேபியர்களுடன் வாழும் வாய்ப்பை உயிரோட்டத்துடன் வைத்திருக்க, அரேபியர்கள் மற்றும் இஸ்ரேலுக்கிடையேயான பேச்சுவார்த்தைகளை ஊக்குவித்தனர். இவ்வாறாக, அமெரிக்காவின் அப்பட்டமான ஆதரவுடன், ஏகாதிபத்திய சூழ்ச்சிகள் மூலம், இஸ்ரேல் உருவாக்கப்பட்டதுடன் ஏகாதிபத்திய கழுகுகளால் பாலஸ்தீனர்கள் ஓர் நிச்சயமற்ற எதிர்காலத்தினுள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த ஏற்பாடு பாலஸ்தீன அரேபியர்களிடமிருந்து நிலத்தை பறித்துக் கொண்டது மட்டுமின்றி, எந்நேரமும் கழுத்தை நெரித்துக்கொண்டிருக்கும் ஒரு நிரந்தர எதிரியையும்கூட நிறுவியிருக்கின்றது. அதனால் அரேபியர்கள் இயற்கையாகவே சினமடைந்திருக்கின்றனர்.

15 மே, 1948இல், முன்னாள் பாலஸ்தீனம், சினாய் தீபகற்பம் மற்றும் தெற்கு லெபனான் ஆகியவற்றுக்கும் இஸ்ரேலுக்குமிடையே ஓர் அரேபிய – இஸ்ரேல் போரானது அங்கு மூண்டு, அது 1949 மார்ச் வரையில் நீடித்தது. ஒருபுறம், ஏகாதிபத்தியவாதிகளின், பிரதானமாக அமெரிக்காவின் மறைமுக ஆதரவுடனும் உதவியுடனும் சிரியா, ஜோர்டான், லெபனான், சவுதி அரேபியா மற்றும் ஏமனை உள்ளடக்கிய எகிப்தின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட, இஸ்ரேலுக்கு ஆதரவான ஒரு அரேபிய அரசுகள் கூட்டணி இருந்தது. மற்றொரு புறம், பாலஸ்தீனம், அண்டை அரேபிய நாடுகள் மற்றும் இராக் ராஜ்ஜியத்தை உள்ளடக்கிய தன்னார்வத் தொண்டர்களைக்கொண்ட அரேபிய விடுதலைப் படை இருந்தது. இதில் இஸ்ரேல் வெற்றியடையுமாறு அதற்கு வழிகாட்டுபவர்களும் வடிவமைப்பாளர்களுமான ஏகாதிபத்தியவாதிகள் பார்த்துக்கொண்டனர்.

ஐநா தீர்மானத்தின்படி முன்னதாக பாலஸ்தீனத்திற்கு வழங்கப்பட்டிருந்த எல்லையை இஸ்ரேல் கைப்பற்றிக்கொண்டு, அதன் மூலம் அப்போதைய பாலஸ்தீனப் பகுதியின் மூன்றில் இரண்டு பங்கை வைத்துக்கொள்ளும் வகையில், 1949இல் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. பச்சை மையினால் வரையப்பட்டிருப்பதால் பச்சைக்கோடு என அழைக்கப்பட்ட போர் நிறுத்த எல்லை ஜெருசலேமைப் பிளவுபடுத்தியது. அது பிரசித்தி பெற்ற பழைய நகரை உள்ளடக்கிய கிழக்குப் பாதியை ஜோர்டானின் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளவும், ஜெருசலேமின் மேற்குப் பாதியை இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவும் வழிவகுத்துவிட்டது.

1948–49இல் நடந்த அரேபிய–இஸ்ரேலியப் போர் இவ்வாறாக முன்னாள் பாலஸ்தீனத்தின் பெரும்பகுதியைத் துண்டாக்கி இஸ்ரேல் வசம் ஒப்படைத்துவிட்டது. யதார்த்தத்தில், அந்தப் போரானது படுகொலைப்போராக மாறி, ஆயிரக்கணக்கில் அரேபியர்களை பலவந்தமாக அகற்றி, வெளியேற்றி அண்டை நாடுகளில் தஞ்சமடையச் செய்துவிட்டது. இன்னும் அடிபணிய மறுத்துக்கொண்டிருப்பவர்கள் எல்லைப்பகுதிக்கு தொடர்ந்து திரும்பவும் விரட்டியடிக்கப்பட்டு, குடிசைப்பகுதிகளில் வாழும் வாழ்க்கைக்குக் கீழாக வாழ்ந்திடத் தள்ளப்பட்டனர். அப்போதிருந்த அமெரிக்க தலைமையிலான சூழ்ச்சிகர ஏகாதிபத்தியவாதிகளால் அமைதியும் நாட்டுரிமையும் வழங்கப்படுமென்ற உத்திரவாதம் அவர்களுக்குத் தரப்பட்டது. ஆனால் அதன் பின்னர், ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து பெறப்பட்ட அனைத்து வகையான ஆயுத, நிதி மற்றும் அரசியல் ரீதியிலான உதவியுடன் அவர்களின் எல்லையை இஸ்ரேல் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்திட அத்துமீறி ஆக்கிரமிக்கத்துவங்கியவுடன், ஒவ்வொரு ஆக்கிரமிப்பையும் கண்டு, பாலஸ்தீனியர்களின் நம்பிக்கை மீண்டும் மீண்டும் நொறுங்கிப் போய்க்கொண்டிருக்கின்றது.

### ஜெருசலேமின் அரசியல் நிலை

இவ்வாறாக, 1967இல் நடந்த ஆறு–நாள் ‘ப்லிட்ஸ்கிரிக்’ திடீர் போரின்போது, ஜோர்டானிடமிருந்து பாலஸ்தீனப் பகுதியில் இருந்த கிழக்கு ஜெருசலேமையும் வெஸ்ட் பேங்கையும், எகிப்திடமிருந்து காஸா ஸ்ட்ரிப்பையும் சினாய் பெனின்சுலாவையும் மற்றும் சிரியாவிடமிருந்து கோலன் ஹைட்ஸையும் இஸ்ரேலானது தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது. அதுமுதற்கொண்டு, கிழக்கு ஜெருசலேம் மீதான இஸ்ரேலின் இறையாண்மை சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்படவில்லையெனினும், ஜெருசலேமின் அனைத்து நகரங்களும் இஸ்ரேலின் ஆட்சிக்குட்பட்டது. பாலஸ்தீனர்கள் கிழக்கு ஜெருசலேமை எதிர்கால

தொடர்ச்சி 9ம் பக்கம்

## ஜெருசலேமை மையமாக வைத்து டிரம்பின் சூழ்ச்சி

# பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தொடர் அக்கிரமங்கள் மனித இனத்திற்கெதிரான குற்றம்

8ம் பக்கத் தொடர்ச்சி

பாலஸ்தீன அரசின் தலைநகரமாகப் பார்த்தார்கள்.

1967ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் தீர்மானம் 242இன்படி, முன்னதாக அந்த ஆண்டு நடந்த போரில் ஆக்கிரமிக்கப்பட்ட அனைத்து எல்லைப் பகுதிகளிலிருந்தும் விலக்கிக்கொள்ளுமாறு இஸ்ரேல் கேட்டுக்கொள்ளப்பட்டது. 1968ஆம் ஆண்டு ஐநா பாதுகாப்புக் கவுன்சிலின் 252ஆவது தீர்மானம், நிலத்தையும் சொத்துக்களையும் அபகரித்தது உள்ளிட்ட, “ஜெருசலேமின் அந்தஸ்தை மாற்றிட முனையும் செயல்பாடுகளை” இஸ்ரேல் கைவிட வேண்டும் எனக் குறிப்பிட்டது. உண்மையில், 1967ஆம் ஆண்டிலிருந்தே ஜெருசலேம் குறித்த பாதுகாப்புக் கவுன்சிலின் 10 தீர்மானங்கள் இருந்தன. அவை ஜெருசலேமின் இறுதி அந்தஸ்து எவரிடம் இருக்கவேண்டும் என்பதை இஸ்ரேலும் பாலஸ்தீனியர்களும் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு முடிவுசெய்ய வேண்டும் எனும் தேவைகளை உள்ளடக்கியிருந்தன. ஆனால், அனைத்தும் வீண் போனது! வழக்கம் போலவே இஸ்ரேல் அண்டை நாடுகளின் நிலப்பகுதியை பலவந்தமாக ஆக்கிரமித்து அங்கிருந்த மக்களை வெளியேற்றி தன் எல்லையை விரிவுபடுத்தியது. குறிப்பாக, பாலஸ்தீனியர்களுக்கெதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் போர் மிகக்கடுமையாக இருந்தது.

முன்பு அரேபியத் தலைமை ஒற்றுமையாக இருந்தது. பின்னர் அது பிளவுபட்டுப்போனது. எகிப்து, சவுதி அரேபியா போன்ற நாடுகள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் சமரசம் செய்துகொண்டும், கூட்டுசேர்ந்துகொண்டும்கூட இருந்தன. மேலும், திருத்தல்வாத சோவியத் தலைமையானது, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் அத்துமீறல்களை எதிர்கொள்ளும் திராணியற்ற பலவீனமான பாத்திரத்தை வகித்துக் கொண்டிருந்தது. பாலஸ்தீனியத் தலைமையும் பிளவுண்டு குழுச்சண்டைகளால் பாதிப்படைந்திருந்தது. இருப்பினும் பாலஸ்தீனிய மக்கள் தங்களிடம் பெரிய அளவில் ஆதாரங்களும் படைக்கலங்களும் இல்லாமலிருந்தாலும், அவர்களுக்கான சுதந்திரமான அரசு வேண்டும், யூதவெறி இஸ்ரேலால் வெளியேற்றப்பட்ட நிலப்பகுதியில் திரும்பக் குடியேறும் உரிமை வேண்டும், தங்களின் தலைநகரமாக ஜெருசலேம் இருக்க வேண்டும் என்ற இம்மூன்றையும் வைத்து அவர்கள் ஆர்வத்தோடும் உறுதியோடும் அவர்களின் எதிர்ப்பைக் காண்பித்தார்கள்.

அதே துரோக ஆக்கிரமிப்பு வரலாற்றை ஜெருசலேமே கொண்டிருக்கிறது. 1967க்கு முன்னர், அது பெரும்பான்மை பாலஸ்தீன மக்களைக் கொண்டிருந்தது. இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் முன்பு வசித்தவர்களை விரட்டியடித்து அவ்விடத்தில் யூதர்களை குடியமர்த்தியிருப்பதால் இப்போது இது யூதர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நகரமாக இருக்கின்றது. இந்த அப்பட்டமான அநீதி ஆக்கிரமிப்புக்கு எதிராக ஏகாதிபத்திய நாடுகள் மட்டுமின்றி, அரேபிய நாடுகள் உள்ளிட்டவைகூட எவ்வித எதிர்ப்புக்குரலையும் எழுப்பவில்லை. இன்னும்கூட, அப்புனித நகரம் 40சதவீதத்திற்கும் மேலான பாலஸ்தீனியர்களைக் கொண்டிருக்கிறது. கருணையடிப்படையில் அவர்களது நகரங்களில் வசித்திட உரிமை வழங்கப்பட்டு “நிரந்தர வாசிகள்” என்ற அட்டைகள் வழங்கப்பட்ட அவர்களை இஸ்ரேல் வெளிநாட்டவர்கள் போல் நடத்துகிறது. அவர்கள் அங்கு வசிக்கும் உரிமையை இஸ்ரேல் அதிகாரிகள் எந்நேரத்திலும் ரத்து செய்வார்கள் என்ற தொடர்ச்சியான அச்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். 1967லிருந்து இஸ்ரேல் 14,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களின் குடியுரிமையை ரத்து செய்ததுடன், கிழக்கு ஜெருசலேமில் பாலஸ்தீனியர்கள் மிகுதியாக வசிக்கும் பகுதிகளின் மத்தியில் யூதர் குடியிருப்புகளைக் கட்டியிருக்கிறது. அத்தகைய பகுதிகளில் இன்று கிட்டத்தட்ட 2,00,000 யூதர்கள், இஸ்ரேலிய பாதுகாப்புப் சேவகர்களின் பாதுகாப்புடன் வசித்து வருகின்றனர். ஐக்கிய நாடுகள் கருத்துப்படி, 1967 முதல் ஜெருசலேமிலுள்ள 20,000 பாலஸ்தீன குடியிருப்புகள் யூதவெறி இஸ்ரேலால் அழித்தொழிக்கப்பட்டுள்ளது.

1980 ஜூலையில், தன்னிச்சையாக ஜெருசலேமை இஸ்ரேலின் ஒன்றுபட்ட தலைநகராக அறிவிக்கும் ஒரு சட்டத்தை இஸ்ரேல் நிறைவேற்றியது. ஐநா பாதுகாப்புக் கவுன்சிலானது இதற்குப் பதில்தரும் வகையில், கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் அதனுடன் இணைத்ததைக் கண்டித்து, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதுடன் அதனை ஒரு சர்வதேச சட்டத்தை மீறிய செயல் என அறிவித்தது. இந்தத் தீர்மானம் ஏற்றுக்கொண்ட பின்னர், இதுவரை ஜெருசலேமில் தங்கள் தூதரகத்தை வைத்திருந்த நாடுகள் அவற்றை விலக்கிக்கொண்டன. 1980ல் நிறைவேற்றப்பட்ட மற்றுமொரு பாதுகாப்புக் கவுன்சில் தீர்மானம், வெஸ்ட் பேங்கிலும் ஜெருசலேமிலும் கட்டுமானப் பணிகளை இஸ்ரேல் நிறுத்திட வேண்டுமென எச்சரித்திருக்கிறது. அத்தீர்மானம், இத்தகைய செயல் ஜெனீவா ஒப்பந்தத்தின் “அப்பட்டமான மீறல்” என எச்சரித்திருக்கிறது. மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் என்ற முறையில் கட்டுப்பட வேண்டிய இஸ்ரேல், அனைத்து சர்வதேச சட்டங்களையும் அலட்சியம் செய்து, அதற்கு இணங்கிடாமல், பாலஸ்தீனியர்கள் மீது போர்வெறித் தாக்குதல்களை தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறது.

### காஸா ஆக்கிரமிப்பு–அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் நடத்தப்பட்ட இஸ்ரேலின் அரசு பயங்கரவாதத்திற்கான எடுத்துக்காட்டு

ஆக்கிரமிப்பு இஸ்ரேல் ராணுவத்தின் காட்டுமிராண்டித்தனத்தையும் பாலஸ்தீனியர்களின் அவல நிலையையும் காண்பிக்கும் இத்தகைய தாக்குதல்களில், ஒப்பீட்டளவில் சமீபத்தில் 2008ஆம் ஆண்டில் நடந்த காஸா பகுதி அத்துமீறல் மற்றும் ஆக்கிரமிப்பு என்பது ஒரு தனி உதாரணமாக விளங்குகிறது. நவம்பர் 2008இல் இஸ்ரேல் ராணுவம் காஸா பகுதியினுள் ஊடுருவியது. 1967இல் நடந்த போரில் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காஸா பின்னர் திரும்பித்தரப்பட்டது. அது ‘உலகின் ஆகப்பெரும் சித்திரவதை முகாம்’ என பெரும்பாலும் அழைக்கப்பட்டது. அதில், கிட்டத்தட்ட 15 லட்சம் பாலஸ்தீனியர்களும் இன்னும் பிறரும் 40 கி.மீ நீள, வெறும் 5–12 கி.மீ அகல நிலப்பகுதியில் நெரிசலாக அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இஸ்ரேல் ராணுவத்தின் படுபயங்கரமான முற்றுகையின் கீழ், பல மாதங்களாக உணவும் அடிப்படை வசதிகளும்கூட இல்லாமல் தடுக்கப்பட்டு வந்தனர்.

காஸாவில் வாழ்க்கை என்பது கிட்டத்தட்ட நொறுங்கிப்போனது. அத்துடன், யூதவெறி இஸ்ரேல் தொடர்ச்சியாக மக்களால் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹமாஸ் தலைவர்களையும் செயல்பாட்டாளர்களையும் படுகொலை செய்ய முயற்சித்தது. இவையனைத்தும் அமெரிக்காவின் உறுதுணையுடன், உதவியுடன் கடுமையாக வேவு பார்த்தல், ஆட்சிக்கவிழ்ப்பு மற்றும் தாக்கும் ஆற்றலைக் கொண்ட உலகின் மிகப் பயங்கரமான போர்வெறி சக்திகளில் ஒன்றாக வளர்ந்துவிட்ட, ஈவிரக்கமற்ற தாக்குதலைத் தொடுத்து புனையப்பட்ட பிரச்சாரத்தின் மூலம் அதை பதிலடித் தாக்குதல் என நியாயப்படுத்தி காரணம் கற்பித்து ஊடுருவும் இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாலஸ்தீனம் ராக்கட் குண்டுவீச்சை மீண்டும் துவங்கிட இட்டுச்சென்றது.

2008, டிசம்பர் 27லிருந்து ஓர் “ஹமாஸ் மற்றும் அந்த வகையைச் சேர்ந்தவைகளுக்கு எதிரான முழுமையான போரை”யும், அப்பாவி குடிமக்கள் மீதான அரசு பயங்கரவாதத்தையும் இஸ்ரேல் அறிவித்தது. தொடர்ச்சியான வான்வெளித் தாக்குதல்கள், போர்க்கப்பல்களிலிருந்து குண்டு வீசித்தாக்குதல், அப்பாச்சே ஹெலிகாப்டர்கள் உதவியுடன் மிகப்பெரும் தரைவழித்தாக்குதல், பூமிக்கடியிலிருக்கும் ரகசிய இடங்களில் ஊடுருவதற்காக அமெரிக்காவிடமிருந்து பெறப்பட்ட “பதுங்கு குழிகளைச் சிதறடிக்கும்” குண்டுகளையும், ஆயுத வினியோக வழித்தடங்கள் உள்ளிட்ட இலக்குகளைக் கண்டுபிடிக்கும் ஜிபிஎஸ்ஸையும் (GPS - Global Positioning System) பயன்படுத்துதல் ஆகியன இதில் அடங்கும். இஸ்ரேல் ராணுவம் மசூதிகள், பள்ளிக்கூடங்கள், பல்கலைக்கழகங்கள் உள்ளிட்டவைகளையும்கூட அடித்துநொறுக்கி தரைமட்டமாக்கி பெண்கள், குழந்தைகள் எனவும் பாராது ஆயிரத்திற்கும் அதிகமான பாலஸ்தீன உயிர்களைப் பலிவாங்கியும், இன்னும் பலரை கடுமையாக காயப்படுத்தியும் இருக்கிறது. இஸ்ரேலிய வான்படை ஜெட் விமானங்களின் வேண்டுமென்றே ஏற்படுத்திய தினசரி வெடிச்சப்தம் குழந்தைகளை செவிடாக்கியது. இஸ்ரேலியக் கொள்ளையர்கள் குடிமக்களைக் குறிவைத்துத் தாக்கியதை அவர்களுக்கு வழங்கப்படும் ‘கூட்டுத் தண்டனை’ என்று நியாயப்படுத்தினர். அமெரிக்காவைச் சேர்ந்த மனித உரிமைச் செயல்பாட்டாளர்களும் கல்வியாளர்களும் இத்தகைய கொடூரத் தாக்குதலை மனித இனத்திற்கு எதிராகப் புரியப்பட்ட குற்றமென அழைத்திருக்கின்றனர். சர்வதேச குற்ற நீதிமன்றம் இதில் தலையிட வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர். இரண்டாம் ஜார்ஜ் புஷ் தலைமையிலான அமெரிக்க ஏகாதிபத்திய வழிப்பறித்திருடர்கள், ஹமாஸ் அமைப்பு ராக்கெட் ஏவுகணைத்தாக்குதலைத் தொடுத்தது எனக் குற்றம்சாட்டி, இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களையும், பலியானவர்களையும் இணையாகப் பார்த்து, ஐக்கிய நாட்டுச் சபையில் அரபு நாடுகள் கொண்டுவந்த ஓர் தீர்மானத்தைத் தடுத்தனர். பாலஸ்தீனர்களுக்கு யூதவெறி இஸ்ரேல் உண்மையில் ஒரு அச்சுறுத்தலாக இருக்கையில், அனைத்து சர்வதேச நியதிகளையும் மீறி, அக்கொள்ளைக்காரர்களுக்கு ஜனாதிபதி டிரம்ப் ஜெருசலேமைப் பரிசாக அளித்திருப்பது நிலைமையை மேலும் மோசமாக்கியிருக்கிறது!

### அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதிகார, துரோக, அத்துமீறிய செயல்

மேலே விளக்கியவாறு, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஒரு யூத அரசு போல, அது உருவாவதற்கு முன்பே, இஸ்ரேலுக்குச் சாதகமாக செயல்பட்டனர். குறிப்பாக, 1956இல் நடந்த சூயஸ் கால்வாய் சம்பவத்திற்குப் பின்னர், பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் ஏகாதிபத்தியவாதிகளின் செல்வாக்கு சரிந்திருந்த நிலையில், இறுதியில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், அரபு நாடுகள் சிலவற்றில் அந்நேரம் நடந்த விடுதலைப் போராட்டம் காரணமாக அவை கொந்தளித்திருந்த நிலையில், அந்நாடுகளுக்கெதிரான ராணுவ மற்றும் அரசியல் அடித்தளமாக இஸ்ரேலைப் பயன்படுத்தி அதிகாரத்தை தங்கள் கட்டுக்குள் கொண்டுவந்தனர். அவ்வாறு இஸ்ரேலைப் பயன்படுத்தியது மட்டுமின்றி, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் சவுதி அரேபியா, கத்தார் போன்ற அரபு நாடுகளில் எண்ணற்ற எடுபிடிகளையும் அமெரிக்க ஆதரவு அரசாங்கங்களையும் வளர்த்தெடுக்க பிரித்தாளும் கொள்கையைக் கையாண்டார்கள். அத்தகைய நாடுகளின் ஆட்சியாளர்களும்கூட, சாமானிய மக்கள் கேள்வியேதும் எழுப்பாத விசுவாசத்தை வெளிப்படுத்திட, மத வெறிவாதத்தைப் பயன்படுத்தி ஆட்சியில் அவர்கள் நீடித்திருக்க அனைத்துவகையான இஸ்லாமிய அடிப்படைவாதத்தையும் தூண்டிவிட்டனர்.

உண்மையைக் கூறுவதானால், கொள்ளையடித்தல், துரோகமிழைத்தல், நியதிகளையும் கொள்கைகளையும் மீறுதல், மோசடி செய்தல் போன்றவற்றை இஸ்ரேல் செய்தது. சுருக்கமாகக் கூறினால் வழிப்பறிக்கொள்ளையடிக்கும் ஒவ்வொரு அம்சத்திலும் அதன் செயல்பாடுகளிலும் இஸ்ரேல் கடைபிடித்த முறையானது, அதன் வழிகாட்டியும் ஆதரவாளரும் ஆசானுமான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முறையைப் பின்பற்றியதுதான் உண்மையில் பிரதிபலித்தது.

மத்தியக்கிழக்கு நாடுகள் உட்பட, உலகம் முழுவதிலும், அமைதியை, ஜனநாயகத்தைப் பாதுகாத்து நிலைநாட்டுகிறோம் எனும் பெயரில், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அவர்களுக்குப் பணிந்து போகும் அரசாங்கங்களை நிறுவிட, பெரிய அளவிலான உளவு வேலைகள் பார்த்து, பல்வேறு நாடுகளில் எண்ணற்ற ஆட்சிமாற்ற சதிகளை திட்டமிட்டு ஏற்கனவே நடத்தியுள்ளனர். எந்த நாட்டிலாவது ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்கள் இவர்களின் ஆணைகளுக்குக் கட்டுப்பட மறுத்தபோதெல்லாம் அங்கு ஆட்சிமாற்றத்தைக் கொண்டுவர இவர்கள் தங்களது உளவு எந்திரத்தை முடுக்கிவிட்டார்கள் மற்றும் மோசடியான போலிக் காரணங்கள் கூறி ஆட்சி மாற்றம் வேண்டுமெனக் கூக்குரலிட்டார்கள்.

தொடர்ச்சி 10ம் பக்கம்

## ஜெருசலேமை மையமாக வைத்து டிரம்பின் சூழ்ச்சி

# பாலஸ்தீனியர்களின் போராட்டம் உலக ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கத்தின் பங்கும் பகுதியுமாகும்

9ம் பக்கத் தொடர்ச்சி

சதிவேலை மூலம், ஒருமுறை இவர்கள் ஈரானில் ஆளும் அரசாங்கத்தை மாற்றினார்கள். ஆனால், ஈரானிய அரசாங்கம் இவர்களிடமிருந்து விலகிச்சென்றதால், ஈரான் மீது சட்டவிரோத, மனிதாபிமானமற்ற தடையை விதித்தனர். அவர்கள் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசேனுக்கு எதிராக, பெரும் பேரழிவு ஆயுதங்களை பயன்படுத்துகிறார் என்ற புரளியைக் கிளப்பி விட்டனர். பின்னர், அது பொய்யென கேள்விக்கிடமின்றி நிருபிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அவர்கள் அதனடிப்படையில் ஈராக்கை அவர்கள் சூறையாடி, சதாம் ஹூசேனை கொன்று, அவர்களுக்குப் பணிந்து போகின்ற அரசாங்கத்தை அங்கு நிறுவினர். அந்த அரபு நாட்டில் நிலவி வந்த மதசார்பற்ற அரிய சூழலை சின்னாபின்னமாக்கினர்.

அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் அரேபிய உலகில் சன்னி– ஷியா இனத்தினரிடையேயான பிளவை தூபமிட்டு வளர்த்து, அதன் மூலம் சகோதரத்துவ சண்டையை மூட்டியது. மிகக்கொடிய அடிப்படைவாத சக்திகளான ஐஎஸ், தலிபான்கள், அல் கொய்தா போன்றவற்றையும்கூட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உருவாக்கி, அவைகளுக்கு உறுதுணையாயிருந்து, உதவிசெய்து வந்தனர். பின்னர், பயங்கரவாதத்திற்கு எதிரான முன்கூட்டிய திடீர்த்தாக்குதல் என்ற பெயரில், ஆஃப்கானிஸ்தானத்தையும் பிற அரபு நாடுகளையும் இவர்கள் சின்னாபின்னமாக்கினர். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள்தான் பல்வேறு நாடுகளில் ரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியிருக்கின்றனர் என்பதையும், ஏஜெண்ட் ஆரஞ் மற்றும் நபாம் குண்டுகளை வியட்நாமில் பயன்படுத்தினார்கள் என்பதையும், பூண்டோடொழிக்கும் யுரேனியத்தை ஈராக்கில் பயன்படுத்தினார்கள் என்பதையும், இன்னும் இதுபோன்ற பலவற்றைச் செய்திருக்கின்றனர் என்பதையும் உலகம் நன்கறியும். சிரியாவில் இவர்கள் கலகப்படையை உருவாக்கி, பயிற்சியளித்து, நிதியுதவி செய்து ஆஸாத் அரசாங்கத்தை அகற்றிட அப்படையைப் ஈடுபடுத்தினர். அந்நாட்டில் பல ஆண்டுகள் போரைத் தொடரச்செய்து, மனிதாபிமான நெருக்கடியைக் கொண்டுவந்தனர். இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற காலம்தொட்டு துப்பாக்கிப் படகுத் தந்திரம் மற்றும் அமெரிக்காவை எதிர்ப்பவைகளை ‘முரட்டு’ நாடுகள் என்று கூறி அவற்றை அழித்தொழிப்பது என இவற்றின் பட்டியல் நீண்டுகொண்டிருக்கிறது.

இவையனைத்தையும் செய்துகொண்டு, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வட்டார பகுதிப் போர்களை தூபமிட்டு வளர்த்துக்கொண்டும், போர் மனப்பான்மையை ஏற்படுத்தி சூழ்நிலையை மோசமாக்கிக்கொண்டும், மக்களை ஒருவருக்கொருவர் மோதவிட்டுக்கொண்டும், துரோக சதி வேலைகளைச் செய்துகொண்டும், இனப்படுகொலையை திட்டமிட்டு நடத்திக்கொண்டும், மத்தியக்கிழக்கு நாடுகள் உட்பட உலகம் முழுவதிலும் மானுடத்திற்கு எதிரான மன்னிக்க முடியாத குற்றத்தைப் புரிந்துகொண்டும் இருக்கின்றனர். அவர்களின் ஏகாதிபத்திய நோக்கத்தை அடையப் பெறும் போக்கில், காணுமிடங்களிலெல்லாம் அதற்குப் பலியாகும் நிராதரவற்ற அப்பாவி மக்களின் ஓலங்களை நிரப்பிக்கொண்டுவருகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள் சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்கும் மானுடத்திற்கும்கூட தொடர்ச்சியான அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களின் மிகவும் நம்பிக்கைக்குரிய யூதவெறி இஸ்ரேலுடன் சேர்ந்துகொண்டு அரேபிய நாடுகளுக்குள், அவைகளுக்கு மத்தியில் உட்பகையையும், ஏன் மத அடிப்படைவாத மோதல்களையும்கூட ஏற்படுத்தி, மத்தியக்கிழக்கு நாடுகளை ஏகாதிபத்திய சூழ்ச்சிகளுக்கான விளைநிலமாக மாற்றிவிட்டனர்.

அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள், தங்களின் செல்வாக்கைப் பிரயோகித்து ஆதாயம் அடைந்திட, பாலஸ்தீனத்திற்கு எதிராகவே இஸ்ரேலை உருவாக்கியிருக்கின்றனர். ஆனால், இஸ்ரேலின் அத்துமீறலுக்கு எதிரான வளர்ந்து வரும் உலகக் கருத்தை அலட்சியம் செய்ய முடியாமல், இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்குமிடையே “இரண்டு அரசுகள்” அமைப்பதற்கான தீர்வுக்கு, முடிவிற்கு என்றுமே வரமுடியாத அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, ஓர் நேர்மையான தரகர்கள்போல் அவர்கள் வேடமிட்டுக் கொண்டிருக்கின்றனர். 1993இல் ஆஸ்லோ உடன்படிக்கையில் உண்மையில் வலுக்கட்டாயமாக வேறு வழியின்றி கையெழுத்திட்ட பின்னர், அமெரிக்காதான் பாலஸ்தீனியர்களுக்கு ஒரு தனி அரசை அமைத்துத்தருவதாக வாக்குறுதியளித்தது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இஸ்ரேலின் தலைநகரமாக ஜெருசலேமை முறையாக அங்கீகரிப்பதிலிருந்து விலகியும் இருந்தார்கள். ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின், குறிப்பாக செல்வாக்கு செலுத்தும் யூத ஆதரவாளர்களின் கண்ணோட்டமும் அணுகுமுறையும் 1995இல் அமெரிக்க தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றிட நடந்த அமெரிக்க காங்கிரஸ் ஓட்டெடுப்பில், இஸ்ரேலின் திட்டப்படி, மிகப்பெருமளவில் அதற்குச் சாதகமாகச் செயல்பட்டதில் வெளிப்பட்டது.

நெடுநாளைக்குப் பின்னர், யூத தொழிலதிபர்கள் உள்ளிட்ட அமெரிக்க ஏகபோகவாதிகளின் ஆணவம் பிடித்த, அத்துமீறி நடக்கக்கூடிய பிரிவினர், பாலஸ்தீனியர்கள் சவப்பெட்டியில் கடைசி ஆணியை அடித்து முடித்து, தங்களின் திட்டத்தை நிறைவேற்றிடும் வகையில், தாங்கள் விரும்பியபடி செயல்படக்கூடியவராக டொனால்டு டிரம்ப்பைப் பார்த்தார்கள். இருந்தபோதிலும், நாடு முழுவதிலும், அமெரிக்க மக்கள் அவர்கள் ஜனாதிபதியின் தன்னிச்சையான, மிகவும் ஆட்சேபத்திற்குரிய முடிவை கடுமையாக எதிர்த்து நிற்பதாக ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன. அத்துடன், அரசின், பாதுகாப்புத் துறைகளின் சில முக்கிய உயர் நிலை நிர்வாகிகளும்கூட இதுபோன்றதொரு அபாயகரமான, அவசர நடவடிக்கையை டிரம்ப் எடுப்பதை எச்சரித்துள்ளதாகவும் தெரிகிறது. மேலும் டிரம்ப்பும்கூட அமெரிக்கத் தூதரகத்தை டெல் அவிவ்–இலிருந்து ஜெருசலேமுக்கு மாற்றும் நடவடிக்கையை ஆறு மாதங்களுக்குத் தள்ளிப்போட கையொப்பமிட வேண்டியிருந்தது என தேசிய பாதுகாப்புக் கவுன்சிலின் ஒரு அதிகாரி கூறியிருக்கிறார். இருப்பினும், எந்த வகையிலும் டிரம்ப்பின் இந்தப் போர்வெறி நடவடிக்கை கண்டனத்தைத் தவிர வேறெதையும் வரவழைக்காது.

### பாலஸ்தீனர்களின் நியாயமான நலன்களை மறுத்து, இந்தியா போர்வெறி அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன், யூதவெறி இஸ்ரேலுடன் கைகோர்த்திருக்கிறது

இவ்விஷயத்தில் இந்தியாவின் நிலைபாடு தெளிவற்று இருந்தது. பாலஸ்தீனிய அரசை அங்கீகரித்த முதன்மையான நாடுகளில் ஒன்றாக இருந்துகொண்டு, ஜெருசலேமையும் பாலஸ்தீனத்தையும் இஸ்ரேலுடன் முழுமையாக இணைக்கும் நோக்கத்தில் துரோகச்செயல் புரியும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் யூதவெறி இஸ்ரேல் ஆட்சியாளர்கள் வகிக்கும் மிகக்கொடிய பாத்திரத்திற்குக் கண்டனம் தெரிவிக்கக்கூடிய இவ்விஷயத்தில் இந்தியா தீவிரமாக இருப்பதற்கான எவ்வித அறிகுறியும் தென்படவில்லை.

வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள ஒரு மென்மையான நழுவிச்செல்லும் அறிக்கையில் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறது: “பாலஸ்தீனம் மீதான இந்தியாவின் நிலைபாடு சுதந்திரமானதும் நிலையானதுமாகும். அது நமது எண்ணங்களின் நலன்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டதாகும். எந்தவொரு மூன்றாம் நாட்டினாலும் அது தீர்மானிக்கப்படவில்லை”. பாலஸ்தீன அரசின் தலைநகராக கிழக்கு ஜெருசலேம் இருந்தது மற்றும் இரண்டு அரசுகள் என்ற தீர்வை ஆதரிக்கிறது என்கின்ற இந்தியாவின் தொடர்ச்சியான நிலைபாடு குறித்த எந்த குறிப்பும் அதில் காணப்படவில்லை.

இந்த நாட்டில் பல ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த பல்வேறு பூர்ஷ்வா கட்சிகளின் அரசாங்கங்களும், எண்ணெய்க்காக தொங்கிக்கொண்டிருக்கும் ஏகபோகங்களின் அப்பட்டமான பொருளாதார நலன்களை முன்னிட்டு, மேற்காசியாவில் செல்வாக்கை பராமரித்துக்கொண்டு ஓர் வல்லரசாக ஆகத்துடிக்கும் அவர்களின் அரசியல் நலன்களை முன்னிட்டு, அரேபிய நாடுகளுடனான ஓர் வெளிப்படையான நல்லுறவை பராமரித்திட முயன்றன. இருப்பினும், சமீப காலமாக இந்திய அரசாங்கமானது, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், யூதவெறி இஸ்ரேல் போன்ற பாசிச சக்திகளுடன் மிக நெருக்கமாக ஒட்டி உறவாடிக்கொண்டும் ராணுவக்கூட்டு வைத்துக்கொண்டும் உள்ளது. இக்கட்டாயத்தினால், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் அத்தகைய கொடிய நடவடிக்கைக்கு எதிரான உறுதியான நிலைபாட்டை எடுக்காமல் இருக்க, இந்திய ஏகபோகவாதிகளும் அவர்களின் சேவக அரசாங்கங்களும் தூண்டப்பட்டிருக்கலாம். இதன் மூலம் இந்திய மக்களின் உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியம் அவமதிக்கப்பட்டும் அலட்சியம் செய்யப்பட்டும் இருக்கிறது. மாறாக, ஆளும் ஏகபோகங்களின் சைகைக்கிணங்க, அவர்களின் சம்பளப்பட்டியலிருக்கும் கட்டுரையாளர்களும் அரசியல் விமர்சகர்களும், அமெரிக்க மற்றும் இஸ்ரேல் ஆட்சியாளர்களின் செயல்பாடு, குறைந்தபட்ச மனித மதிப்புகளையும், மரியாதையையும், நீதியையும் பேசுகின்றதா இல்லையா என்பதைப் பற்றி ஏதும் கவலைப்படாமல், இந்திய அரசாங்கத்தின் அமெரிக்க ஆதரவு, இஸ்ரேல் ஆதரவு நிலைபாட்டுக்கு ஆதரவாக மக்களின் கருத்தைக் கொண்டுவர முயற்சித்து வருகின்றனர்.

### ஜெருசலேம் மற்றும் சுதந்திரமான பாலஸ்தீனம் பிரச்சினைகளை சக்திவாய்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் மூலமாகத்தான் தீர்க்க முடியும்

நிறைவாக, ஆக மோசமான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளால் ஜெருசலேம் தன்னிச்சையாக யூதவெறி இஸ்ரேலுக்கு வழங்கப்பட்டிருக்கும் சமீபத்திய நிகழ்வானது, அரசியல், பொருளாதார, ராணுவ மேலாதிக்க ஆதாயத்தை அடைந்துகொண்டு அதைப் பராமரித்திடுவதற்காக போர்களைப் புரிந்து கொண்டும், கொலைகள் செய்து கொண்டும், சதி வேலைகள் செய்து கொண்டும், துரோகங்கள் புரிந்து கொண்டும் மற்றும் இது போன்ற அனைத்தையும் செய்துகொண்டுமிருப்பது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகளின் உலகளாவிய திட்டத்தினடிப்படையில்தான் என்பதைத் திட்டவட்டமாகக் கூறவேண்டியிருக்கிறது. பாலஸ்தீனம் உள்ளிட்ட அரபு நாடுகள் இப்பிரச்சினையை இப்புரிதலின்படி பார்த்தாக வேண்டும். சக்திவாய்ந்த, போர்க்குணமிக்க, உலகளாவிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் எழுச்சியின்றி இத்தகைதோர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. வெளிப்படையான உடனடிக் கோரிக்கையென்பது, அரபு நாடுகளிலுள்ள, ஏன் உலகத்திலுள்ள சரியாகச் சிந்திக்கக்கூடிய எவரும் எழுப்ப வேண்டிய கேள்வியானது, ஜெருசலேமை இஸ்ரேலுடன் இணைக்க ஆதரவுதரும் முடிவை ஒட்டுமொத்தமாகப் பின்வாங்கிட வேண்டும் என்பதாகும். டிரம்ப்பின் இந்நடவடிக்கையை வெறுமனே ஒரு அசட்டுத்தனமான செயல் என எடுத்துக்கொள்ளக்கூடாது. எல்லையை விரிவுபடுத்தியிருப்பதின் மூலம், பாலஸ்தீனியர்கள் கொண்டிருந்த அவர்களின் தாய்மண்ணுக்கான நியாயமான நீண்டநாள் கனவுக்கு சாவுமணி அடிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு நிரந்தரத் தீர்வை எட்டிட, பாலஸ்தீனியர்களின் நியாயமான கோரிக்கைகளான, இறையாண்மை கொண்ட சுதந்திரமான ஒரு தனி பாலஸ்தீன அரசை ஏற்படுத்துவதையும், வெளியேற்றப்பட்ட பாலஸ்தீனியர்கள் திரும்பி வருவதையும் அவர்களுக்கு புனர்வாழ்வு தருவதையும் உத்திரவாதப்படுத்துவது, அவர்களின் புனித நகரமான ஜெருசலேமின் அந்தஸ்தை தக்கவைத்திடுவது ஆகியவற்றை உள்ளடக்கிய போராட்டங்களை உடனடியாகப் பலப்படுத்திட வேண்டும். நாகரிகமிக்கவர்கள் எவரும், சுதந்திரத்தையும் அமைதியையும் நேசிக்கும் ஒவ்வொருவரும், சரியாகச் சிந்திப்பவர்கள் ஒவ்வொருவரும், பாலஸ்தீன மக்களின் இந்த கோரிக்கைகள் யாவும் குறைந்தபட்சமானவையே என்பதை ஒப்புக்கொள்வர். ஆக, பாலஸ்தீனியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கான ஐயத்திற்கு இடமற்ற ஆதரவுக்காகவும், ஜெருசலேமை இணைத்திட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் யூதவெறி இஸ்ரேலும் போட்டிருக்கும் ஏகாதிபத்தியத் திட்டத்தை முழுமையாக எதிர்த்திடவும் குரலெழுப்பிட வேண்டும் ■

## தமிழ்நாடு அரசாங்கத்தின் பஸ் கட்டண உயர்வு

# அரசு போக்குவரத்துத்துறையை ஒழித்து தனியாரை ஊக்குவிக்கிறது

2ம் பக்கத் தொடர்ச்சி

நிர்வாகங்களின் கீழ் நேரடியாக இயங்கிவந்தன. 1990களுக்குப்பின் அரசுப் போக்குவரத்து படிப் படியாக தனியார்மயமாக்கப்படும் என்ற தமிழக அரசின் கொள்கை அறிவிப்பிற்குப்பிறகு அனைத்து மட்டங்களிலும் தனியார்மயம் புகுத்தப்பட்டது. அதாவது பேருந்து பராமரிப்பின் அனைத்து செயற்பாடுகளும் அவுட்சோர்சிங் மூலம் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டது. இதன்மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஈட்டிவந்த பெருத்த லாபமானது தனியாருக்கு திருப்பிவிடப்பட்டது.

பல ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையிலும், நாகர்கோவில் இராணித் தோட்டத்திலும் பேருந்து கட்டுமானப் (Body Building) பணிகள் முழுமையாக நடத்தப்பட்டன. போக்குவரத்துத் தொழிலாளர்களே இப்பணியைச் செய்ததமையால் செலவு குறைவு; இழப்பு இல்லை. இன்று அத்தகைய பணிமனைகள் மூடப்பட்டுவிட்டன. தனியார்மயக் கொள்கையின் விளைவாக பேருந்துக்கட்டுமானம் தனியாருக்கு வழங்கப்பட்டது. அதனால் கூடுதல் தொகை லாபமாகத் தனியாருக்குச் செல்கிறது. போக்கு வரத்துக் கழகங்களுக்கு இழப்பு ஏற்படுகிறது. அவை எதை இழக்கின்றனவோ அது தனியாருக்கு லாபமாகச் செல்கிறது. எல்லா நிறுத்தங்களிலும் நின்று செல்லும் பேருந்தைப்போல இந்த லாபத்தின் பயணம் அமைச்சர்கள், அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், ஒப்பந்ததாரர்கள், இடைத்தரகர்கள் ஆகியோரின் இருப்பிடத்தில் கமிசனை வருவாயாக இறக்கி இறக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இதுவே டயர், உதிரிப்பாகங்கள் கொள்முதலிலும் நடைபெற்றுவருகிறது. இவற்றின் விலைகளை நிர்ணயிப்பது தனியார் நிறுவனங்களே. சொந்த லாபத்திற்காக இவர்கள் ஆட்சியாளர்களுடன் அமைத்துள்ள கூட்டணிக்குப் போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் திட்டமிட்டு பலியாக்கப் பட்டு வருகிறது.

### தனியார் பேருந்து நிறுவனங்கள் கொழுத்த இலாபமீட்ட அரசாங்கம் வழிவகை செய்கின்றது

அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் இழப்பு இழப்பு என்று சொல்லப்படும் நிலையில் தனியார்ப் பேருந்துகள் தொடர்ந்து லாபம் ஈட்டுவது எப்படி?. தனியார் பேருந்து அதிபர்கள், மூன்று நான்காண்டு களுக்கு ஒருமுறை புதுப்புது பேருந்துகளை மாற்று கிறார்கள்: சொகுசான பேருந்துகளை வழித்தடங் களில் விடுகிறார்கள். அதிக லாபம் அடைவதன் காரணமாகவே வழித்தடங்களுக்கு உரிமம் வாங்கு வதிலும் போட்டி போட்டுக்கொண்டு முதலீடு செய்கின்றனர்: பேருந்துகளை இயக்குகின்றனர். ஒன்றிரண்டு பேருந்துகளுக்கு உடைமையாளர் களாக இருந்தவர்கள் பல பேருந்துகளுக்கு அதிபர் களாகவும் மாறுகின்றனர். வெளிமாநில நிறுவனங் களோடும் போட்டி போட்டுக்கொண்டு கொழுத்த லாபம் ஈட்டிவருகின்றனர்.

அவர்கள் அரசு, போக்குவரத்துக்கழகங்களால் வசூலிக்கப்படும் கட்டணத்தை வசூலித்தே லாபமீட்டி வருகின்றனர். அவர்கள் லாபம் அடையும் போது அரசுப் போக்குவரத்துத்துறை லாபம் அடைய வில்லை என்றால் கோளாறு அரசு நிர்வாகத்தில் தான் இருக்கிறது?




பிப்ரவரி 1 முதல் 5 வரை பஸ் கட்டண உயர்வுக்கு எதிராக மாநிலம் தழுவிய கையெழுத்து இயக்கம் நடைபெற்றது, சென்னையில் பல்வேறு இடங்களில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தோழர்கள் பொது மக்களிடம் கையெழுத்து பெறுகின்றனர்

சென்னை, மதுரை ஆகிய நகரங்களில் தனியார் டவுன்பஸ்கள் கிடையாது. மற்றபடி மாநிலம் முழுவதும் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அவை நகரப் பேருந்து (டவுன்பஸ்), மொஃபசல் சர்வீஸ் எனவும் தொலைதூர பேருந்துகளாக அரசு மற்றும் தனியார் ஆம்னிபஸ் என்றழைக்கப்படும் பேருந்துகளும் உள்ளன. எனவே, ஒவ்வொரு முறையும் தனியார் பேருந்து முதலாளிகளின் கோரிக்கைக்கிணங்கவே பஸ் கட்டணம் உயர்த்தப்படுகிறது என்பது ஊரறிந்த ரகசியமாகும். புதிதாக உயர்த்தப்பட்ட கட்டணம் தனியார் பேருந்துகளிலும் வசூலிக்கப்பட்டு தனியார் முதலாளிகளுக்கு கொழுத்த லாபம் கூடுதலாகச் செல்கிறது. தொழிலாளர்களுக்குப் போனசை மறுக்கும் அரசாங்கம், முதலாளிகளுக்குத் தாராளமாக வழங்கும் கூடுதல் லாப போனசாக இந்தக் கட்டண உயர்வை செய்ததுபோல் தோன்றுகிறது.

அடுத்து, பேருந்து நிலையங்களில் ஒவ்வொரு பேருந்தும் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் இயக்கப்படும்போது தனியார் பேருந்துகளுக்கு அதிக நேர இடைவெளியும் அரசுப் பேருந்துகளுக்கு குறைந்த நேர இடைவெளியும் ஒதுக்கப்படுகின்றது. தனியார் பேருந்தில் கூட்டம் நிரம்பி வழிவதற்கும். குறைந்த நேர இடைவெளியைக் கொண்ட ஒரு அரசுப் பேருந்தில் கூட்டம் குறைவாக இருப்பதற்கும் தான் இத்தகைய ஏற்பாடு. ஆக, அரசுப் போக்கு வரத்துத் துறைக்கு நஷ்டம் ஏற்படுத்தி தனியார் பேருந்தை மிகஅதிக லாபத்தில் இயக்க அரசு நிர்வாகமே ஏற்பாடு செய்கிறது.

அரசு தொலைதூர பேருந்துகள் வேண்டு மென்றே குறைக்கப்பட்டு தனியார் ஆம்னி பஸ்களின் இயக்கம் அதிகரிக்கப்படுகிறது. இந்நாள், முன்னாள் அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் அந்த ஆம்னி பேருந்துகளின் முதலாளிகளாக இருப்பதை மக்கள் நன்கு அறிவர். தீபாவளி, பொங்கல் விழாக்காலங் களில் ஆம்னி பேருந்துகள் கட்டணத்தை தாறுமாறாக உயர்த்தி வசூல் வேட்டையாடி வருவதை தமிழக அரசாங்கமே ஒப்புக்கொண்டுள்ளது. அநியாயக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று அறிவித்த அதே அரசாங்கம் அவர்களை மிஞ்சும் வகையில் அதிஅநியாயக் கட்டண உயர்வை அரசு பேருந்து களில் நிரந்தரமாக எல்லா நாட்களுக்குமாக உயர்த்தியுள்ளது கொடுமையிலும் கொடுமை.

### கட்டண உயர்வுக்கு ஊதிய உயர்வைக் காரணம் கூறுவது அநியாயமாகும்

பஸ் தொழிலாளர்களுக்குச் சம்பளமாக ஒட்டு மொத்த வருமானத்தின் பெரும்பகுதி செலவிடப் படுகின்றது என்று கூறப்படுகிறது. தொழிலாளர் களுக்கு வழங்கப்படும் ஊதியம், திருவோட்டுப் பிச்சையல்ல. அவர்களின் இழந்த உழைப்பு சக்தியை மீண்டும் பெற்று அடுத்த நாளும் பணிசெய்யத் தேவைப்படும் குறைந்தபட்சப் பராமரிப்புத் தொகை. அதுவும், 1957இலிருந்து இந்திய அரசு, முதலாளிகளின் சங்கங்கள், தொழிற்சங்கங்களால் ஒத்துக்கொள்ளப்பட்ட அடிப்படையில் உருவான ஊதியக்கொள்கை. அரசால் நிர்ணயிக்கப்பட்ட அந்தச் சம்பளத்தையும் கேட்டுத்தான் சமீபத்தில் போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டத்தை நடத்தினார்கள். அனைத்துக் கட்சிகளும் பொது மக்களும் அவர்களது கோரிக்கைகளை ஆதரித்தனர். எனவே உழைப்புக்கு வழங்கப்படும் ஊதியத்தைக் குறை கூறும் அருகதை இந்த அரசாங்கத்துக்கும் இல்லை. எந்த அரசுக்கும் இல்லை. நாகரிகக் குடிமக்கள் எவரும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அந்த உழைப்புக்குக் கொடுக்க வேண்டிய ஊதியத்தை, பணப்பலன்களைக் கொடுக்காமல் இருப்பதில் எவ்வித நியாயமுமில்லை. அவர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதி, ஓய்வூதியப் பாக்கி ரூபாய் 7,000 கோடித் தொகையை நிறுத்தி வைப்பது குற்றச்செயலல்லவா? அவர்களுக்கு உரிமையான அத்தொகையை அவர்களின் அனுமதியின்றிக் கையாண்டு வேறு செலவுக்குத் திருப்பிவிட்டது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பொருளாதாரக் குற்றப்பிரிவின் கீழ் குற்றச்செயலல்லவா? குற்றவாளிக் கூண்டில் நிற்பது யார்? தொழிலாளர்களா? நிர்வாகமா? அரசா?.

தமிழ்நாடு போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர், போக்குவரத்துத் தொழிலாளர் களின் சம்பள உயர்வு, நிலுவைத் தொகை வழங்கல் ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டு மென்றால் பேருந்துக் கட்டணத்தை ஏற்றியாக வேண்டும் என்று பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தொழிற்சங்கத்தினரிடம் அப்போதே கூறிவிட்டதாகவும் அதை தொழிற்சங்கங்கள் ஏற்றுக் கொண்டுவிட்டதாகவும் கூறிவருகிறார். அவ்வாறு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை தொழிற்சங்கங்கள் மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டும். பொதுமக்களின் தலையில் சுமைகளை ஏற்றி, அவர்களின் வாழ்க்கையை மேலும் துன்பத் திற்குள்ளாக்கி அதில் ஒரு சிறு பகுதியினரான தொழிலாளிகள் கூலி–சம்பள ஆதாயங்களை பெறவேண்டுமென பாட்டாளி வர்க்கம் ஒருபோதும் நினைப்பதில்லை என்பதை போக்குவரத்து தொழிற்சங்கங்கள் வெட்ட வெளிச்சமாக தெளிவுபடுத்தவேண்டும்.

### ஏழை–நடுத்தர மக்கள், விவசாயிகள் வயிற்றில் அடித்த கட்டண உயர்வு

பேருந்துகளைப் பெருமளவில் பயன்படுத்து பவர்கள் ஏழைகளே. தினக்கூலியாக நாள்தோறும் வேலைக்குச்செல்லவேண்டியுள்ளது.தனியார்துறை ஊழியர்கள், சிறுதொழில் வணிக நிறுவனங்களில் வேலைசெய்வோர், விவசாயக் கூலிகள், சிறு

தொடர்ச்சி 12ம் பக்கம்

## பஸ் கட்டண உயர்வுக்கு எதிரான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் இயக்கத்தில் சிபிஐ (எம்), சிபிஐ (எம் எல்) லிபரேஷன் பங்கேற்பு



பிப்ரவரி 08, 2018 அன்று பஸ் கட்டண உயர்வுக்கு எதிராக தேனியில் நடந்த கண்டன கூட்டத்தில் தோழர்கள் கோஷம் எழுப்புகின்றனர்




பிப்ரவரி 10, 2018 அன்று பஸ் கட்டண உயர்வுக்கு எதிராக மதுரையில் நடந்த கண்டன கூட்டத்தில் சிபிஐ (எம்) தோழர் விஜயராஜன் உரையாற்றுகிறார்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# ஜனவரி 23: நேதாஜி 121வது பிறந்ததினம்

**ஜனவரி 23, 2018 அன்று நேதாஜி பிறந்ததினத்தையொட்டி ஏஐடிஎஸ்ஓ, ஏஐடிஓய்ஓ, ஏஐஎம்எஸ்எஸ் ஆகிய அமைப்புகள் சென்னை, மதுரை, உசிலம்பட்டி, தேனி, நெய்வேலி ஆகிய இடங்களில் பொதுக்கூட்டம், பொன்மொழி புகைப்பட கண்காட்சி**


சென்னை


மதுரை


நெய்வேலி

# பஸ் கட்டண உயர்வை முறியடிக்க மக்கள் இயக்கம் தொடரவேண்டும்

*11ம் பக்கத் தொடர்ச்சி*

விவசாயிகள், கூடைகளில் பல பொருட்களை விற்பனை செய்வோர், கட்டிடத் தொழிலாளர்கள் ஆகியோரே அன்றாடம் பெருமளவில் பேருந்து களைப் பயன்படுத்துகின்றனர். ஏற்கெனவே அரை வயிற்றுக் கஞ்சியோடு அரைமனித வாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இவர்கள். அன்றாடம், இவர்கள் பெறுகின்ற கூலியில் பஸ்கட்டணம் மேலும் ஒரு பகுதியை விழுங்கிவிடுகிறது. பேருந்துக்கட்டண உயர்வைச் சமாளிக்க இவர்கள் உணவு, உடை, மருத்துவச்செலவில் ஒன்றைக் குறைத்து வாழ வேண்டிய வறுமை நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அதே சமயம் விவசாயிகளும், சாலையோர சிறு வியாபாரிகளும் தங்கள் பொருட்களை ஏற்றிச் செல்ல அதிக கட்டணம் கொடுக்க வேண்டும். இதனால் உணவு, பால், காய்கறி, பழங்கள், மருந்துகள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட் களின் விலையேற்றத்துக்கும் தமிழ்நாடு அரசாங்கம் உரம் போட்டிருக்கிறது.

## போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கும் தமிழக அரசாங்கம்

பேருந்துக் கட்டண உயர்வுக்கு எதிராக பல்வேறு கட்சிகளும், அமைப்புகளும் போராட்டங்ளை நடத்தின. மாணவர்களும் வகுப்புக்களைப் புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டங்களின் மீது காவல்துறையை ஏவி அடக்குமுறை அவிழ்த்துவிடப்பட்டது. தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடியத் தொழிலளார்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஓய்வுப்பெற்ற நீதிபதியைக்கொண்ட விசாரணை ஆணையம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மறுபுறம் அதைப்பொருட்படுத்தாது எதேச்சதிகாரமாகத் தொழிலாளர்களின் 7 நாட்கள் சம்பளத்தை பறிக்கவும் அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியான திமுகவும் பேருந்துக் கட்டண உயர்வு ‘மக்கள் விரோத’ கொடுங் கட்டண உயர்வு என்று கூறி கட்டண உயர்வு திரும்பப் பெறும்வரை தொடர்ச்சியாக போராடப் போவதாகவும் அறிவித்தது. சென்ற முறை காங்கிரஸ் ஆதரவுடன் திமுகவின் தலைமையிலான மாநில ஆட்சியின்போது மக்கள் விரோத கட்டண உயர்வை புகுத்தினர். அதற்கு இப்பொழுது சொல்லப்படும் அதே டீசல், டயர், உதிரிப்பகங்கள், ஊதியம் ஆகியவற்றின் உயர்வைக் காரணங்காட்டினர். அதுமட்டுமின்றி போராடுபவர்களை தனது ஆட்சிக் கலத்தில் திமுக கடுமையாக ஒடுக்கியும் வந்துள்ளது. எனவே தற்போதைய எதிர்ப்பு வெறும் எதிர்கட்சியின் சம்பிரதாய சடங்காக, அடையாள எதிர்ப்பாகவே முற்றுப்பெற்றுள்ளது. கட்டண உயர்வு கொடுமையானது, மக்கள் விரோதமானது என்று எதிர்க்கட்சிகள் வர்ணித்திருப்பது உண்மைதான் என்றால் அந்த ஒரே கோரிக்கையை முன்வைத்து அவர்களால் போராட முடியும். இவர்கள் போராட்டம் மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்களின் தன்னெழுச்சியான எதிர்ப்புடன் இணைக்கப் பட்டிருந்தால் கட்டண உயர்வைத் திரும்பப்பெற அஇஅதிமுக அரசாங்கத்தை நிர்ப்பந்தித்திருக்கும். தாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வரும்பட்சத்தில் அத்தகைய கட்டண உயர்வுகளை தங்கள் ஆட்சியில் செய்யமாட்டோம் என்று எதிர்க்கட்சிகளால் உறுதி மொழி வழங்க முடியவில்லை. காரணம் உலகமய, தாராயமய, தனியார்மய முதலாளித்துவக் கொள் கையை, இதர அரசியல் கட்சிகளைப் போலவே திமுகவும் தனது ஆட்சியில் பின்பற்றியது. இப்போது, கட்டண உயர்வுகளை எதிர்ப்பதாக வெறுமனே காட்டிக்கொள்கிறது. முதலாளிகளைப் பகைத்துக் கொண்டு மக்களை ஆதரிக்கும் மனப்பான்மை திமுகவுக்கோ இதர எதிர்கட்சிகளுக்கோ இல்லை.

ஜனநாயகம் மக்களுக்கானது என்று ஏட்டளவில் சொல்லிக்கொண்டு மக்கள்மீதான தாக்குதல்களை இன்று தமிழக அரசாங்கம் தீவிரப்படுத்துகிறது. அரசாங்கத்திற்கு எதிரான குரல்கள் நெறிக்கப் படுகின்றன. ஆர்ப்பாட்டம் பேரணி போன்ற போராட்டங்களுக்குகூட அனுமதி மறுக்கப்படு கின்றது. இது என்ன ஜனநாயகம் என்று பலரும் கேள்வி எழுப்புகின்றனர். உண்மையில் இது பணநாயகமே. அதாவது, முதலாளித்துவ ஜனநாயகம். முதலாளித்துவச் சுரண்டலை பாதுகாக்கம் வர்கக்கருவியே அரசு எந்திரம். எனவேதான் அது உழைக்கும் சாதாரண மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை மறுக்கிறது. எனவே பேருந்துக்கட்டணம் உள்ளிட்ட மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக போராடுவது ஒன்றே மக்கள் முன்னுள்ள வழி. அத்தகைய விழிப்புணர்வுடன் கூடிய போராட்டம் மட்டுமே அதிகாரத்தின் காட்டுப் பாய்ச்சலுக்கு கடிவாளமிடும். எனவே, இந்த மக்கள் விரோத கட்டண உயர்வை முழுமையாகத் திரும்பப்பெற வேண்டுமென அரசாங்கத்தைத் தொடர்ந்து நிர்ப்பந்திக்க மக்கள் தங்களுக்கான போராட்டக் கமிட்டிகளை உருவாக்கி ஒன்றிணைந்து போராட முன்வர வேண்டும் ■

# தமிழக அரசாங்கத்தின் பஸ் கட்டண உயர்வை எதிர்த்து இடதுசாரி கட்சிகள் பேரணி – மறியல்



சென்னை


மதுரை


சேலம்

**பிப்ரவரி 12, 2018ல் சிபிஐ (எம்), சிபிஐ (எம் எல்) லிபரேஷன், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சிகளின் பஸ் கட்டண உயர்வுக்கு எதிரான இயக்கங்கள்**

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்*

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**